07TH
FEBRUARY
2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 99 | பக்கங்கள் - 17 | editor.uthayam@gmail.com

## அவசரகால நிலை நீடிப்பு; பாராளுமன்றம் ஒப்புதல்!

இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலையை

02ம் பக்கம்பார்க்க...

## ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை உள்வாங்கள்!

**வெளியாகியது வர்த்தமானி**

நாட்டிலுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல

02ம் பக்கம்பார்க்க...

# இணக்கப்பாடின்றி நிறைவடைந்த 8 மணி நேர ஓமான் பேச்சு

எம்.என். முஹம்மட்
சிறப்பு நிருபர்

- யுரேனியம் செறிவூட்டல் ஈரான் மறுப்பு
- மீண்டும் ஈரானை நோக்கி ஆபிரஹாம் லிங்கன்
- உஷார் நிலையில் இஸ்ரேல் படைகள்
- எத்தகைய தாக்குதலுக்கும் தயார்; ஈரான் எச்சரிக்கை!

மத்திய கிழக்கின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வரும் நிலையில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் ஓமானில் நடைபெற்ற பேச்சு வார்த்தை இணக்கப்பாடுகள் ஏதுமின்றி முடிவடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா குறிப்பாக முன்வைத்த யுரேனியம் செறிவூட்டல் நிகழ்ச்சி நிரலை ஈரான் மறுத்துள்ளதாக வோல்ஸ்ட்ரீட் ஜெர்னல் சற்றுமுன் அறிக்கை வெளியிட்டுள்ளது. கிட்டத்தட்ட 8 மணித்தியாலங்கள் தொடராக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை என்றும் இருதரப்பும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பி விட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்ற நிலையில் தொடராக பேச்சுவார்த்தைகள் நடக்குமா இல்லையா என்ற

02ம் பக்கம்பார்க்க...

## சாதாரண தரப் பரீட்சை இம் மாதம் 17ல் ஆரம்பம்

**மேலதிக வகுப்புகளுக்கு 11 முதல் தடை!**

எதிர்வரும் 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரண

02ம் பக்கம்பார்க்க...



## வடக்கிலோ தெற்கிலோ இனவாதம் தலைதூக்க இனி இடமளிக்கப்படாது

**கண்டியில் ஜனாதிபதி திட்டவட்டம்**

ஊழல் அற்ற நிர்வாகம், ஜனநாயகம் மற்றும் பொருளாதார சுபீட்சம் பற்றி பேச முடியாத எதிர்க்கட்சியில் உள்ள சிலரின் ஒரே கோஷமாக இனவாதம் மாறிவிட்டது என்றும், வடக்கிலோ அல்லது தெற்கிலோ இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்பட மாட்டாது என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

03ம் பக்கம்பார்க்க...

# முன்னாள் எம்.பீக்கள் விதவைகளின் ஒய்வூதியம் தொடர்பில் செவ்வாயன்று முழுநாள் விவாதம்

- 485 பேரின் ஓய்வூதியம் நிறுத்தம்
- அரசுக்கு வருடாந்தம் 396 பில்லியன் மிச்சம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 316 பேர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் விதவைகள் 165 பேர், விசேட தேவையுள்ள நான்கு பிள்ளைகள் இதுவரை அனுபவித்து வந்த ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கான சட்டமூலம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட உள்ளது. நிதி அமைச்சர் ஹர்ஷன நாணயகார சமர்ப்பித்துள்ள சட்டமூலமான விவாதம் செவ்வாய்

03ம் பக்கம்பார்க்க...

## ரீ 20 உலகக் கிண்ண போட்டிகள் இலங்கை இந்தியாவில் இன்று ஆரம்பம்

(அரபாத் பஹுறுதீன்)

முழு விபரங்கள் 16, 17ம் பக்கங்களில்...

# இலவசக் கல்வியை வலுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

**சஜித் பிரேமதாச அரசிடம் வேண்டுகோள்**



இந்த அரசாங்கம் கல்வி மறுசீரமைப்பென்ற போர்வையில் கல்விக்கான வாய்ப்புக்களை குறைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார். ஒக்ரோபர் 10 ஆம் திகதி கல்வித்துறை

03ம் பக்கம்பார்க்க...

# தேசத் துரோகிகளாக அறிவிக்கப்பட்ட முஸ்லிம் வீரர்களை தேசப் பற்றாளர்களாக அறிவிக்க கோரிக்கை!

**அமைச்சர்களான பிமல், சுனில் செனவியுடன் ஹிஸ்புல்லாஹ் எம்.பி.பேச்சு.**

தேசத் துரோகிகளாக அறிவிக்கப்பட்ட முஸ்லிம் வீரர்கள் தொடர்பான விவகாரத்தில், ஹிஸ்புல்லாஹ் எம்பி. நேற்று (06) பாராளுமன்றத்தில் அமைச்சர்கள்

03ம் பக்கம்பார்க்க...










அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி
Amãna Bank

## சாதாரண...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தரப் பரீட்சை முடியும் வரை மேலதிக வகுப்புகளுக்கு தடைசெய்யப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் 3,545 பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, 11 ஆம் திகதி முதல் பரீட்சை முடியும் வரை கல்விப் பொதுத் தராதர வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து சேவைகளும் தடைசெய்யப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## இணக்கப்பாடின்றி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அறிவிப்பை இதுவரை இரு தரப்பும் அறிவிக்கவில்லை.

ஆரம்பத்தில் துருக்கியில் நடைபெறவிருந்த இந்த பேச்சுவார்த்தை ஈரானின் வேண்டுகோளுக்கு அமைவாக ஓமானுக்கு மாற்றப்பட்டது. துருக்கி திரை மறைவில் இருந்து கொண்டு பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும் ஏற்கனவே அஸ்தானா பேச்சுவார்த்தையில் தமக்கு துரோகம் இழைத்து விட்டதாக ஈரான் கருதுகிறது. அஸ்தானா பேச்சுவார்த்தைகளின் போது சிரியா விவகாரத்தில் துருக்கி இப்பொழுது சிரியாவை கிட்டத்தட்ட தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்ற நிலையில் ஈரானின் சிரியா மீதான செல்வாக்கை குறைத்த அந்த அனுபவம் துருக்கியின் மத்தியஸ்தத்தையும், துருக்கியில் நடைபெறும் பேச்சு வார்த்தையையும் அவ்வளவு தூ ரத்துக்கு ஈரான் விரும்பவில்லை என்பதை காட்டுகிறது.

இதே நேரம் அமெரிக்காவின் ஐந்து ஜம்போ விமானங்கள் பெருமளவு ஆயுதங்களோடு மத்திய கிழக்கை அடைந்திருப்பதாகவும் கடந்த 24 மணித்தியாலங்களில் பல விமானங்கள் வந்தடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அரேபிய கடலில் இருந்த அமெரிக்காவின் யூ எஸ் எஸ் ஆபிரகாம் லிங்கன் கப்பலானது மீளவும் ஈரானை நோக்கி பயணிப்பதாக சில செய்திகள் வெளியாகி உள்ளன. டொனால்ட் ட்ரம்ப் தரப்பினர் இது தொடர்பாக தொடராக பல அறிக்கைகளை விடுவித்து வருகின்றனர். இந்த நெருக்கடியின் காரணமாக உருவாகியுள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடியை கையாள்வதில் அமெரிக்கா மிகப் பெரும் இடரை சந்தித்து வருகின்றது.

இஸ்ரேல் தனது படைகளை முழுமையாக தயார் நிலையில் வைத்திருக்கின்றது. இஸ்ரேலிய இராணுவ தளபதி எந்நேரமும் நாங்கள் தாக்குதலுக்கு தயாராக இருக்கின்றோம். நாங்கள் எந்த நேரமும் முழுமையான தாக்குதலை நடத்துவோம் என அறிவித்து இருக்கின்ற அதேவேளை தனது மக்களுக்கு முழுமையான யுத்தத்திற்கு ஆர்வமாக இருக்குமாறு குறிப்பிட்டுள்ள நிலையில் ஈரானில் இருந்து மிக மிக அவசரமாக தனது குடிகளை வெளியேறுமாறு அமெரிக்கா அறிவித்தல் வெளியிட்டுள்ள அடுத்த கணம் சீனாவும் தனது குடிகளை வெளியேறுமாறு அவசர அவசரமாக அறிக்கை வெளியிட்டுள்ளது. முடியுமானால் தரை வழி மார்க்கத்தை பயன்படுத்தாமல் அவசரமாக ஈரானை விட்டும் வெளியேறுமாறும் அமெரிக்க தூதுவர் ஆலய அதிகாரிகள் உட்பட தூதுவருக்கும் தனது கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதே நேரம் அமெரிக்கா ஒரு அறிக்கையை மேற்கோள் காட்டி ஈரான் இஸ்ரேலை தாக்க திட்டமிடுவதாகவும் அவ்வாறே ஈரான் இஸ்ரேலை தாக்குமாக இருந்தால், தான் அது தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும் என ஈரானை கடுமையாக எச்சரித்துள்ள நிலையிலேயே இப் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன. இப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. ஏனெனில் அமெரிக்காவினுடைய 500 கிலோமீட்டர் ஏவுகணை வீச்சை குறைக்க வேண்டும் என்ற நிபந்தனையும், யுரேனியம் செறிவூட்டல் நிறுத்தத்துக்கான நிபந்தனையும், சீனாவுடனான எண்ணெய்க் கொள்ளளவை நிறுத்துமாறு வேண்டுவதையும் ஈரானைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொள்வதற்கு மிகவும் கடினமான நிபந்தனைகளாக காணப்படுகின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் உலகளாவிய போர்ச்சூழல் ஒன்று உருவாகுமாக இருந்தால் அது ஒரு மிகப்பெரிய ஆபத்தை உலகுக்கு கொண்டு வரும் என இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

## ஆசிரியர்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆசிரியர் வெற்றிடங்களுக்கு, அரச சேவையிலுள்ள பட்டதாரிகள் மற்றும் ஏனைய பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி, கடந்த 2026.02.02 திகதியிடப்பட்ட 2474/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம், 2023.02.10 ஆம் திகதி நிலவரப்படி தற்போது அரச சேவையில் உள்ள மற்றும் 2023.02.10 ஆம் திகதி நிலவரப்படி 45 வயதுக்குள் உள்ளவர்கள், குறித்த திகதியில் பட்டப்படிப்புத் தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இதற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு குறித்து வெளியான மகிழ்ச்சி தகவல்

; ஞிநஉயைட ழேவஉைந குழச சுநஉசரவைஅநவெ புக புசயனரயவநள

மேலும், 2474/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம், பின்வரும் பிரிவுகளின் கீழ் பட்டப்படிப்புத் தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்களுக்கான விசேட அறிவுறுத்தல்கள்

இதன்படி,

2023.02.10 ஆம் திகதியன்று 40 வயதுக்குக் குறைந்த, வர்த்தமானி அறிவித்தலின் படி பட்டப் படிப்பை பூர்த்தி செய்த, அரச சேவையில் ஈடுபடாத பட்டதாரிகள்.

2023.02.10 ஆம் திகதியன்று 40 வயதுக்குக் குறைந்த, வர்த்தமானி அறிவித்தலின் படி பட்டப் படிப்பை பூர்த்தி செய்த, 2023.02.10 ஆம் திகதிக்குப் பின்னர் அரச சேவையில் நியமனம் பெற்று தற்போது வரை சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள்.

2023.02.10 ஆம் திகதியன்று 40 வயதுக்குக் குறைந்த, வர்த்தமானி அறிவித்தலின் படி பட்டப் படிப்பை பூர்த்தி செய்து, 2023.02.10 அன்று அரச சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும், தற்போது முறையான அனுமதியுடன் அப்பதவியிலிருந்து விலகியுள்ள உத்தியோகத்தர்கள்.

2023.02.10 ஆம் திகதியன்று 40 வயதுக்குக் குறைந்த, அக்காலப்பகுதியில் அரச சேவையில் பதவியொன்றை வகித்த, வர்த்தமானி அறிவித்தலின் படி 2023.02.10 ஆம் திகதிக்குப் பின்னர் பட்டத் தகைமையைப் பெற்ற அரச உத்தியோகத்தர்கள்.

2023.01.27 அன்று வெளியிடப்பட்ட இலக்கம் 2317 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள், தற்போது அரச சேவையில் ஈடுபடுபவர்களாயின், இந்த வர்த்தமானி அறிவித்தலின் படி மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

அதே சமயம், அவ்வாறு ஏற்கனவே விண்ணப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், கடிதம் கிடைக்கும் முகவரி என்பவற்றில் திருத்தங்கள் இருப்பின் மட்டும், பரீட்சைத் திணைக்களத்தின் உரிய இணைப்பின் ஊடாக கோரிக்கைகளை முன்வைத்து அந்தத் திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கான தொடர்பு

இது தொடர்பான விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்புகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு தொடர்புக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

சிங்களம் - 0112-784819/ 0112-785634/ துரித இலக்கம் 1988

தமிழ் - 0112-785634

ஆங்கிலம் - 0112-785258/ 0112-784819/ 0112-787399

வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அழைப்பதன் மூலம் மேற்கொள்ளலாம் என்று அமைச்சகம் தனது அறிவிப்பில் மேலும் தெரிவித்துள்ளது.


## அவசரகால...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான யோசனை இன்று (06) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பில் யோசனைக்கு ஆதரவாக 106 வாக்குகள், எதிராக 02 வாக்குகள் பதிவு செய்யப்பட்டன, இதனால் அவசரகால நிலை நீடிப்பு உறுதி செய்யப்பட்டது.

இந்த அவசரகால நிலை கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் பிரகடனப்படுத்தப்பட்டது. ‘டித்வா’ (னுவைறயா) சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து, பொதுப் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளை தடையின்றி முன்னெடுப்பதற்கான நடவடிக்கையாக இது நடைபெற்றது.

பாராளுமன்றத்தில் இதனைப் பற்றி உரையாற்றிய பிரதமர் ஹரினி அமரசூரிய, அரசு ஒருபோதும் அவசரகாலச் சட்டத்தை ஊடகங்களை நசுக்க அல்லது எந்தவொரு குழுவினரையும் ஒடுக்க பயன்படுத்தாது என்றும் உறுதியளித்தார்.



## வடக்கிலோ...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நமது மிகப்பாரிய பலம் ஒற்றுமை என்றும், நமது நாட்டின் முக்கிய பலம் நாம் ஒன்று சேரும் இடத்தில் இருக்கிறது என்றும், அனைவரும் ஒன்றிணைவதன் மூலம் நாட்டை வலுவாகக் கட்டியெழுப்ப முடியும் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கடந்த கால பாரம்பரியத்தின் அடிப்படையில், புதிய உலகத்திற்கு பொருத்தமான பொருளாதார மாற்றத்திற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் வலியுறுத்தினார்.

நேற்று (06) பிற்பகல் நியங்கொட பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற டித்வா சூறாவளியால் வீடுகள் முழுமையாக சேதமடைந்த மற்றும் மண்சரிவு அபாயத்தில் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட குடும்பங்களின் மீள்குடியமர்த்துவதற்காக 'Rebuilding Sri Lanka" வேலைத்திட்டத்தின் கீழ் காணி வழங்குதல் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

வீடமைப்பு திட்டத்தை ஆரம்பித்து வைத்தல் மற்றும் புதிய வீட்டின் நிர்மாணப் பணிகளைத் தொடங்குதல் ஆகியவற்றிலும் ஜனாதிபதி பங்கேற்றார்.

தும்பனை, ஹரிஸ்பத்துவ, ஹதரலியத்த, பூஜாபிட்டிய மற்றும் யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 146 குடும்பங்களுக்கு இந்த நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

அதன்படி, முதல் கட்டமாக, வீடுகளை நிர்மாணிப்பதற்காக இருபது இலட்சம் ரூபாவுக்கான காசோலைகளும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளைக் கொண்ட குடும்பங்களுக்கு அவர்களின் வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக மூன்று இலட்சம் ரூபாவுக்கான காசோலைகளும், சேதமடைந்த வர்த்தகங்களை மீளமைப்பதற்காக இரண்டு இலட்சம் ரூபாவுக்கான காசோலைகளும் இதன்போது வழங்கப்பட்டன.

மேலும், நியங்கொட பிரிவேனா பாடசாலைக்கு கட்டிடம் ஒன்றும் நன்கொடையாக வழங்கப்பட்டது.

நமது அரசியல் வரலாற்றில், ஒவ்வொரு அரசியல் மேடையிலும் மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதே முக்கிய தலைப்பாக இருந்தது. முன்னாள் தலைவர்கள் அதற்காக பல்வேறு வாக்குறுதிகளை அளித்தனர். அதன்படி, நமது நாட்டில் அரசாங்கங்கள் மாறியபோது, மோசடி மற்றும் ஊழல் ஒரு முக்கிய தலைப்பாக மாறியது.

நமது நாட்டின் அரசியல் மேடையில் மீண்டும் ஒருபோதும் மோசடி மற்றும் ஊழல் பற்றிய ஒரு முழக்கம் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

மேலும், இந்நாட்டின் அரசியல் மேடையில் ஜனநாயகம் ஒரு முக்கிய தலைப்பாக மாறிவிட்டது. தேர்தல்களை ஒத்திவைப்பது, பத்திரிகையாளர்களைக் கொல்வது, வீதிகளில் இடம்பெறும் கொலைகள் பற்றிப் பேசப்பட்டது. இந்த நாட்டில் மீண்டும் ஒருபோதும் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாது. சாதகமான அரசியல் கோசங்களை இழந்துவிட்டனர்.

எனவே, நம்மிடையே உள்ள உள் முரண்பாடுகளையும் மோதல்களையும் வென்று நம்மை ஒரே தேசமாக கட்டியெழுப்ப வேண்டும். - என்றார்.

## இலவச...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தொடர்பாக கல்வியமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் கடந்த 5 ஆம் திகதி விடையளித்ததன் பின் பாராளுமன்றத்தில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த அக்டோபர் 10 ஆம் திகதி கல்வித் துறை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு 4 மாதங்களுக்குப் பின்னர் இன்று (05) பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் பதிலளித்ததைத் தொடர்ந்து, அது தொடர்பாக விளக்கம் அளித்த சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சரின் விளக்கத்தில் பல்கலைக்கழகத் துறையில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான கேள்விகளுக்கு பதில்கள் கிடைக்கவில்லை என்றும், அரசாங்கம் பாடசாலைகளை மூடுவதில்லை என்று கூறினாலும், இன்றளவில் பல பாடசாலைகள் மூடப்பட்டதாக தகவல்கள் காணப்படுகின்றன என்றும், இது தொடர்பாக முறையான விளக்கம் அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கு வழங்குவதாகக் கூறிய மீதமுள்ள 2/3 எங்கே?

அதேபோல, ஆசிரியர்கள் கோரிய மீதமுள்ள 2/3 கொடுப்பனவை வழங்குவதாகக் கூறியும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், தற்போது பாடசாலைகளில் பெற்றோரிடமிருந்து பணம் சேகரித்து தொலைக்காட்சி சாதனங்கள், ஸ்மார்ட் திரைகளை பெறும் திட்டம் நடைமுறையில் காணப்படுவதாகவும், கொழும்பு ரோயல் கல்லூரியிலும் கூட இவ்வாறான நிதி வசூலிப்புக்கான அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளதால், இது தொடர்பாக கவனம் செலுத்தி, இலவசக் கல்வியை வலுப்படுத்த கல்வி அமைச்சிடமிருந்து அந்த வளங்களை பெற்றுக் கொடுக்குமாறும், பாடசாலைகளில் நடக்கும் இந்த பண அறவீடுகளை நிறுத்துமாறு சுற்றறிக்கை மூலம் உத்தரவிடுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கம் கொள்கை முடிவாக டிஜிட்டல்மயமாக்கலை முன்னெடுக்க தயாராகி வருகின்றது.

ஆனால் கல்விச் சீர்திருத்தத்தில் 1-5 தரம் வரை தகவல் தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கத் தவறியுள்ளது என்றும், டிஜிட்டல்மயமாக்கல் அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தால், தரம் 1-13 வரை தகவல் தொழில்நுட்பத்தை ஆங்கில மொழி வழியாகக் கற்பிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கம்பஹா விக்ரமாரச்சி பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கற்கைகள் நிறுவனத்தை மூடுவதற்கும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தை மூடுவதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுவதாக தகவல்கள் வருகின்றன. இவை இலவசக் கல்விக்கான வாய்ப்பை குறைக்கும் ஏற்பாடுகளாக காணப்படுகின்றன. ஆகையால் இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## தேசத்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நடவடிக்கை எடுப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஹிஸ்புல்லாஹ் புத்தசாசன, சமய மற்றும் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி அவர்களை சந்தித்து கலந்துரையாடினார். காலனித்துவ ஆட்சிக்கெதிராக போராடிய பல முஸ்லிம் வீரர்கள், ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் 'தேசத் துரோகிகள்' என முத்திரை குத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களை உரிய வகையில் தேசப் பற்றாளர்களாக அங்கீகரிக்க வேண்டிய அவசியம் குறித்து ஹிஸ்புல்லாஹ் வலியுறுத்தினார்.

மேலும், இவ்விவகாரம் தொடர்பான முழுமையான ஆவணங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளிட்ட தேவையான அனைத்து தகவல்களையும் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி அவர்களிடம் அவர் கையளித்தார். இதற்கு பதிலளித்த அமைச்சர், குறித்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

## முன்னாள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**


அன்று முழு நாளும் இடம்பெற உள்ளது சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றம் அறிவித்த பின் செவ்வாய் அன்று விவாதத்துக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டது.


விவாதம் செவ்வாய்யன்று இடம்பெறும் என வெள்ளியன்று நடைபெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக சபை முதல்வர் விமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

முன்னாள் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக மாதாந்தம் 33 பில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது.

முன்னாள் எம்பிக்கள் மற்றும் அவர்களது மனைவிமார்கள் உட்பட 485 பேருக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்காக வருடாந்தம் 396 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வருடம் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஓய்வூதியம் வழங்கப்பட்ட எம்பிக்களின் மனைவிமார்களான விதவைகள் 165 பேர் என பாராளுமன்ற வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 FEBRUARY 07 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இனவாதத்தினையும் மதவாதத்தினையும் தோற்கடிப்போம்

நாட்டின் 78வது சுதந்திர தின நிகழ்வின் போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஆற்றிய உரையில் பன்முகத்தன்மையை மதித்து தாய் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இனவாதம் மதவாதத்தினால் எமது பலத்தை நாம் இழந்து கொள்கிறோம் என குறிப்பிட்ட ஜனாதிபதி எமது நாட்டின் அகராதியில் மிகவும் அசிங்கமான சொற்கள் இனவாதம் மற்றும் மதவாதம் எனக் குறிப்பிட்டுள்ளார். புதிய இலங்கையை கட்டியெழுப்புவது இனவாதத்துக்கும் பிரிவினைக்கும் இடமளிக்க போவதில்லை என முழு நாட்டு மக்களுக்கும் சுதந்திர சதுக்கத்தில் இருந்து ஜனாதிபதி சபதமிட்டு கூறியுள்ளார்.

நாடு இன்று உள்ள நிலையில் ஜனாதிபதி அளித்துள்ள இந்த உத்தரவாதம் மிக முக்கியமானது. பல இன மக்கள் வாழும் நாடு என்ற வகையில் எமது தாய் நாடு செல்ல வேண்டிய பாதை இதுவாகும். இந்தப் பாதையில் நாடு பயணித்தால் மட்டுமே நாட்டுக்கு விமோசனம் உண்டு. “கட்டி எழுப்புவோம் இலங்கையை“ என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற சுதந்திர தின விழாவில் பேசிய ஜனாதிபதி எமது அகராதியில் இருக்கும் இரு மோசமான சொற்கள் இனவாதமும் மதவாதமும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றினால் நாம் எம்மையே சுயமாக அழித்துக் கொள்கின்றோம். எனவே எமது நாட்டில் எந்த பிரிவினைக்கும் மதவாதத்திற்கும் இடமளிக்கப் போவதில்லை என குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி சுதந்திர தின நிகழ்வில் குறிப்பிட்ட பல விடயங்கள் நாட்டின் பெரும்பான்மை சமூகத்திற்கு மட்டுமின்றி சிறுபான்மை சமூகத்திற்கும் நம்பிக்கை அளிக்கக் கூடியதாக உள்ளது. இலங்கை என்பது பல்வேறு மதத்தவர்கள் வாழும் நாடு. தமக்கென தனித்துவமான கலாச்சாரங்களைக் கொண்டு மக்கள் உள்ளனர். இதற்கு பிரதானமாக இரு மொழிகளையும் தாய்மொழியாக கொண்டு மக்கள் வாழும் நாடு. நம்பிக்கைகள் கலாசார வழிபாடுகளில் வேறுபாடுகள் உள்ளன.

இந்த மாற்றங்களை மோதல்களுக்காக பயன்படுத்தாமல் மாற்றங்களை மற்றவர்களுக்கான ஆயுதமாக உயர்த்திப் பிடிக்க முடியும். ஆனால் அவை நமது பலத்தை பலவீனப்படுத்த முடியும். நாடு சுதந்திரம் அடைந்து 78 வருடங்களை அடைந்தும் நாட்டில் இன்னும் மதவாதமும் பிரிவினைவாதமும் தலை தூக்கி வருகின்றதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

நாம் பிரிந்து செயல்பட்டால் நவீன இலங்கையை கட்டியெழுப்ப முடியாது போகும். நாம் இலங்கையர் என்ற வகையில் நாட்டின் பன்முகத்தன்மையை மதித்து ஒவ்வொரு பிரஜையும் செயல்படுவதன்மூலமேசுபீட்சமானநாட்டைகட்டியெழுப்பமுடியும். சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி ஆற்றியுள்ள உரையின் அடிப்படையில் சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சகல சமயத்தவர்களினதும் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

ஜனாதிபதி இச் சந்தர்ப்பத்திலே விடுத்திருக்கும் இவ் அழைப்பானது எமது எதிர்கால சமுதாயத்திற்கு மிக அவசியமான ஒன்று. நாம் சுதந்திரம் பெற்று 78 வருடங்களாகியும் இன்றும் எம்மால் ஒற்றுமையாக முன் செல்ல முடியாமல் இருக்கின்றது.

எனவே நாம் கடந்த காலங்களிலே ஒவ்வொருவரும் செய்த தவறுகளை உணர்ந்து இந்த நாட்டை எமது எதிர்கால தலைமுறையினருக்காக இனவாத மதவாதத்தினை தோற்கடித்து நாட்டைக் கட்டி எழுப்ப முன் வர வேண்டும். அதுதான் இப்போது காலத்தின் தேவையாக உணரப்படுகிறது.

SAFEWAY TRAVELS & TOURS
Organizing Ha!,
Umrah Pilgrimage & Airline Ticketing M F SAFEWAY IMPEX (Po) LTD.
Exporters of Tea




191/20-1,
Siebel Garden,
High Level Road.
Kirulapana,
Colombo-05,
Sri Lanka.

E-mail:
safewayfarook1@gmail.com

Web:
sfewaytravelsandtours.com

Hotline:
+94 11 2513227
+94 11 2513226
+94 11 2513373

Insta :
Umarahwithsafeway
FB:
Safeway Travels & Tours



# சோசியல் டிவியினால் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம்





இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சோசியல் டிவி கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைந்து, சிலோன் கிறீன் லைப; Plantation மற்றும் ணுயுடீஊழு நிறுவனத்தின் அனுசரணையில் அட்டாளைச் சேனை மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான முகாம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

சோசியல் டிவி ஊடக வலையமைப்பின் ஸ்தாபக பணிப்பாளர் என்.எம்.முஹம்மட் சிராஜின் நெறிப்படுத்தலில் சோசியல் டிவி ஊடக வலையமைப் பின் ஆலோசகரும், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளருமான எம்.ஏ.சி.எம். றியாஸ் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை இராணுவத்தின் 241 படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேட் கமாண்டர் ஆர்.எஸ். சி.திசாநாயக்க, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சீ. அஹமட் அப்கர், அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எஸ். எம்.உவைஸ், அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் உதவி பணிப்பாளர் டபிள்யூ.ஏ.கங்கா சாகரிக்கா, அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.வபா, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உயிரியல் அறிவியல் துறைத் தலைவர் ஏ.எம். றியாஸ் அகமட், அக்கறைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியின் அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ், அம்பாரை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ.முபாரக் அலி, Ceylon Green Life Plantation நிறுவனத்தின் பிரதி பணிப்பாளர் எம்.மதன், அஷ்ரப் ஞாபகாத்த வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி எஸ். மருதராஜன், சோசியல் டிவி ஊடக வலையமைப்பின் முக்கியஸ்தர்கள், இளைஞர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சோசியல் டிவி ஊடக வலையமைப்பின் உறுப்பினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பதிவு மற்றும் வழிகாட்டி குழுவினர், ஊடகப் பிரிவு மற்றும் தன்னார்வ இளைஞர்கள் ஆகியோர்களின் முழுமையான அர்ப்பணிப்புடன் செயல்பட்டு நிகழ்வின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினர். அவர்களது தன்னலமற்ற சேவை அணைவரினாலும் பாராட்டை பெற்றனர்.

## புத்தளம் பாத்திமாவின் 64 ஆவது கல்லூரி தினத்தில் கௌரவிக்கப்பட்ட ஓய்வாளர்கள்




(சியாஜ்)

புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தின் 64 வது கல்லூ ரி தினத்தினை முன்னிட்டு, 1962ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பித்தது முதல், எக்காலத்திலாயினும் நற்பணி யாற்றி தற்பொழுது பணிநிலை ஓய்வு பெற்றிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், சிற்றூ ழியர்கள் என சுமார் 80 பேர் கலந்து கொண்ட ஒன்று கூடல் திங்கட்கிழமை (02) மனோரம்மியமான மாலைப் பொழுதில் திறந்த வெளியில் பாட சாலையின் அதிபர் சரீனா அஜ்மல் தலைமையில் இடம் பெற்றது.

பாடசாலை சமூகத்தின் அழைப்பை ஏற்று வந்த பணிப்பூக்கள் பாடசா லையின் அதிபர், முகாமைத்துவ குழுவினர், மற்றும் அனைத்து ஆசிரியர்களாலும் முகமன் கூறி வரவேற்றதுடன் பாடசாலையின் மாணவத் தலைவர்களால் 64வது அகவை சின்னங்களை அணிவித்தும், மலர்க்கொத்துக்களை வழங்கி, பேண்ட் வாத்தியங்கள் முழங்க பணிப்பூக்கள் கௌரவமாக அழைத்து வரப்பட்டனர். வடக்கு, மேற்கு, கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் நாலாபுறங்களிலி ருந்தும் அழைப்பை ஏற்று ஆர்வத்துடன் வருகை தந்திருந்தனர். இளம் ஆசிரியர்கள் போல் சந்தோஷமாக இந்நிகழ்வில் கலந்துக்கொண்டதுடன் ஆசிரியர்களால் வழங்கப்பட்ட நிகழ்ச்சிகளிலும் மிகவும் சந்தோஷமாக கலந்துக்கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் சமூகத்தை விட்டு பிரிந்த பணிப்பூக்களுக்காகவும் பாடசாலையின் அபிவிருத்திக்காகவும் , பாடசாலையில் கடமையாற்று வோருக்காகவும் துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



நாதீ பௌண்டேஷன் கல்விக்கு கரம் கொடுப்போம் செயற்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட தாருஸ்ஸலாம் முஸ்லிம் வித்தியாலயத்தின் பயன்பாட்டுக்காக நாதீ பௌன்டேஷன் பிரதிநிதிகள் ஊடாக பாடசாலை அதிபர் ஏ.பிஸ்ருல்ஹாபியிடம் ஒலி விரிவாக்கி (டீயகயட) ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்:- எம்.ரீ.ஆரிப்)

## அநுராதபுர மாவட்டத்தில் ஆர் ஜே மீடியாவின் இலவச செயலமர்வு



( ஐ. ஏ. காதிர் கான் )

ஆர்.ஜே. மீடியா ஊடக வலையமைப்பு, அதன் ஆறு வருட பூர்த்தியை முன்னிட்டு, இலங்கையின் 25 மாவட்டங்களையும் மையமாகக் கொண்டு, பெண்களின் சுய தொழிலை ஊக்கப்படுத்தும் முகமாக ஊடகம், தலைமைத்துவம், மருதாணிக் கலை, மணப்பெண் அலங்காரம் மற்றும் கேக் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலவச செயலமர்வுகளை, நாடளாவிய ரீதியில் நடத்தி வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக, அநுராதபுர மாவட்டத்தை மையமாகக் கொண்டு, இரண்டாவது முறையாகவும் ஒருநாள் இலவச செயலமர்வு, அண்மையில் அநுராதபுர ஸி.டி.ஸி. வரவேற்பு மண்டபத்தில், அதன் பணிப்பாளர் ஏ.எம். இன்ஷாப் தலைமையில் இடம்பெற்றது.

வளவாளர்களாக, மாணவர்களுக்கான மருதாணிப் பயிற்சியினை இலங்கைக் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மாணவியும் மருதாணிப் பயிற்று விப்பாளருமான ஹஷ்மா ஷபீன், மணப்பெண் அலங்காரம் தொடர்பான விரிவுரையை தகவல் தொழில் நுட்பக் கற்கையில் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவரும் அழகுக் கலை நிபுணருமான என்.எப். அப்ரா, கேக் தயாரிப்பு பற்றிய விரிவுரையை எஸ்.ஆர். கேக்கரி உரிமையாளரும் கேக் கலை பயிற்றுவிப்பாளருமான ஷிப்னா ரிஸ்லான் ஆகியோர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் பிரதம அதிதியாக அநுராதபுர நியூ ஓரியண்ட் ஜ/வல்லர்ஸ் பணிப்பாளர் ஏ.என்.ஏ. நாஸிர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் எம்.எஸ்.எம். அல் பாரிஸ் உற்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.



நிகழ்வில், அநுராதபுர மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

## கலாபூசணம் பீர் முகம்மதினால் நூல்கள் அன்பளிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)



ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரும் சிரேஷ்ட எழுத்தாளருமான கலாபூசணம் ஏ. பீர் முகம்மது, நீண்ட காலமாக சேகரித்து வந்த பெறுமதியான நூல்களில் ஒரு தொகுதியை சாய்ந்தமருது மழ்ஹருஷ் ஷம்ஸ் மகா வித்தியாலய நூலகத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

சாய்ந்தமருது பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நூ லகர் ஏ.எம். முஸ்தாக், பாடசாலை அதிபர் ரிப்கா அன்சார் மற்றும் உதவி அதிபர்கள், பாடசாலை நூ லக பொறுப்பாசிரியை உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

எதிர்காலத்தில் ஏனைய பாடசாலை நூலகங்களுக்கும் இவ்வாறான நூல்களை அன்பளிப்பு செய்ய திட்டமிட்டுள்ளதாக கலாபூசணம் ஏ. பீர் முகம்மது இதன்போது குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற பின்னரும் கல்வி மற்றும் இலக்கியத் துறைகளில் மிகவும் ஆர்வத்துடன் இயங்கி வருகின்ற கலாபூசணம் ஏ. பீர் முகம்மது போன்றவர்களின் இத்தகைய பங்களிப்புக்கள், பாடசாலை மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்ப தற்கும் மாணவர் சமூகத்தின் அறிவுப் பசிக்கும் பெரும் துணையாக அமையும் என்று நூலகர் ஏ.எம். முஸ்தாக் பாராட்டுத் தெரிவித்தார்.

# இனவாதம் தீவிரவாதத்துக்கு அரசு முற்றுப் புள்ளி வைக்குமா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கை ஐரோப்பிய ஏகாதிபத்திய த்திடம் இருந்து விடுதலை பெற்று 78 வருடங்களாகின்றன. 1948 ஆம் ஆண்டு பெப்பரவரி மாதம் 04 ஆம் திகதி இலங்கை தேசம் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து சுதந்திரம் அடைந்ததை குறிக்கும் வகையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்ததின் கீழான இரண்டாவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் 2026 பெப்ரவரி 04 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, “ஒரு சுதந்திர தேசத்தின் மக்கள் என்ற நிலையில் சுதந்திரத்தின் உச்ச பலனை அடைய முன்னோக்கி செல்வதற்கு தடையாக இருந்து வரும் மானசீக அடிப்படையில் வேஷன்றி இருக்கின்ற பல்வேறுவிதமான வேறுபாடுகள், பாகுபாடுகள், ஒதுக்கல்கள், ஏற்றதாழ்வுகள் இன அடிப்படையிலான முரண்பாடுகள் மற்றும் பிரிவினைவாதம் போன்ற காரணிகள் நாம் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற பெரும் தடையாக இருந்து வருவதால் நாட்டில் சாதாரண மனிதனில் இருந்து அதிகாரிகள் வரையில் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும்” என தெரிவித்திருந்தார். இது இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் ஆகும்.

1915 ஆம் ஆண்டு முதல் அடிக்கடி நடைபெற்ற இனக் கலவரங்கள், மத ரீதியாக காலத்திற்கு காலம் கிளப்பி விடப்பட்ட சந்தேகங்களால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட இன அடிப்படையிலான வேறுபாடுகள், பிளவுகள், அரசியல் அதிகார அடிப்படையிலான கிளர்ச்சிகள் காரணமாக இடம்பெற்ற நாசகார செயல்கள், ஏற்படுத்தப் பட்ட அழிவுகள் என்பன நாம் அனுபவித்த துயரமான நிகழ்வுகளாகும்.

இத்தகைய செயற்பாடுகள் மூலமாக பிரித்தாளும் தந்திரோபாயங்கள் கையாளப் பட்டதால் நாடு பலவிதமான நெருக்கடிகளையும் பொருளாதார இழப்புக்களையும் சந்திதிருப்பதை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. இத்தகைய செயற்பாடுகள் அனைத்தும் காலத்திற்குக் காலம் ஆட்சியை பிடிப்பதற்காக ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப் பட்ட அரசியல் தந்திரோபாயங்களாகும். அதனால் ஒரு இனம் இன்னொரு இனத்தின் அடிமையாகவும் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தின் அடக்கு முறைக்கு உள்ளாகி அடி உதை வாங்கி நொறுங்கிய சந்தர்ப்பங்கள் ஏராளம் உள்ளன. அது மட்டு மல்லாமல் நாடு சுதந்திரம் அடைந்திருந்தாலும் ஊழல் மிகுந்த ஆட்சியும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய தடையாக இருந்துள்ளன.

2019 ஆம் ஆண்டின் பின்னர் இந்த நாடு சந்தித்த பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்த காரணிகளில் இதுவும் ஒன்றாகும். ஆனாலும் காலம் கடந்தாவது இந்த நாட்டு மக்களுக்கு இதனை உணர்த்த ஒரு தலைவர் உருவாகியமை பாராட்ட த்தக்க விடயமாகும்.

அந்த வகையில் ஜனாதிபதியின் சுதந்திர தின உரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. 2010 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி கலபொட அத்தே ஞானசார தேரர், டான் பிரியசாத், இத்தே கந்த சத்தாதிஸ்ஸ தேரர், கசப்ப தேரர் போன்ற தீவிர போக்குடையவர்கள் இனவாத சிந்தனைகளை விதைத்து பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் சிறுபான்மையினர் குறித்த குரோதத்தை விதைத்தவர்களே இந்த நாட்டின் ஆட்சி பீடம் ஏறுபவர்களை தீர்மானிக்கும் பலமாக மாறி இருந்த கால கட்டத்தின் உச்சமாக இருந்தது. அவர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று சொன்னால் அத்தகைய தலைவருக்கு வாக்களிக்கும் அளவிற்கு ஏற்கனவே ஜனாதிபதியால் சொல்லப்பட்ட அளவிற்கு வெறுப்பூட்டல் ஏகாதிபத்தியம் இந்த நாட்டை ஆட்சி செய்தது எனலாம். இதன் பின்னர் இந்த நாட்டில் இனவாதமும் மத வாதமும் அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக இருக்காது என்பது ஜனாதிபதியின் இந்த உரையின் பின்னணியாகும். கடந்த காலங்களில் அரச ஆதரவில் இயங்கிய இவ்வாறான இனவாத, பிரிவினைவாத மற்றும் மத வாத அடக்குமுறைகளால் பாதிக்கப் பட்டவர்கள் தமிழர்களும் முஸ்லிம்களுமாவார்.

அவ்வாறே சட்டம், நீதி நிர்வாகத்திலும் பாரபட்சங்கள் இல்லாமல் சட்டத்தின் ஆட்சி நிலவுகின்றது என்ற விடயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அனைவரும் சட்டத்திற்கு கீழாகவே இருக்க வேண்டும். யாரும் சட்டத்திற்கு மேற்பட்டவர்களாக இருக்க முடியாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட காரணம் சட்டத்திற்கு மேலால் செல்ல முற்படும் நிலைமைகள் இன்றும் தொடர்வதாகும் அண்மையிலும் சட்ட விடயங்கள் குறித்து சில விடயங்களில் நிலவுகின்ற அதிருப்தி நிலை காரணமாக சட்டமா அதிபரை பதவி நீக்கக் கோரி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இதுபோன்ற நிலைமைகள் சட்டத்துறையில் இருக்க வேண்டிய பாரபட்சம் இல்லாத நேர்மை நிலை தொடர்பாக சந்தேகங்களையும் கேள்விகளையும் தோற்றுவிக்கின்றன. நீதி கிடைக்க வேண்டியவர்களுக்கு உரிய முறையில் நீதி நியாயம் கிடைக்க வேண்டும்.





ஒரு நாட்டின் சுதந்திரம், சமத்துவம், சக வாழ்வு, சகோதரத்துவம் போன்ற காரணிகளே அந்த நாட்டை பொருளாதார சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்ல அடிப்படையானதாக அமைகின்றன.

## ஜனாதிபதியின் சுதந்திர தின உரை சொல்வது என்ன?

அந்த வகையில் நாடு இன்னும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து விடுபடவில்லை. ஊழல்கள், துஷ்பிரயோகங்களும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. கடந்த கால ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் குறித்து தொடர்ச்சியாக பேசப்பட்டாலும் ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான பாரியளவிலான விசாரணைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்கனவே முன்னைய மஹிந்த ராஜபக்ஷ கால ஆட்சியாளர்களால் வெளிநாடுகளில் முடக்கப்பட்டு இருப்பதாக அரசியல் மேடைகளில் சொல்லப்பட்ட சொத்துக்களை தேடும் வேலைகள் எதுவும் நடக்கவில்லை. அவ்வப்போது சிறிய சிறிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் மாத்திரமே இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் நடக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கோதாபய ராஜபக்ஷ, சிரந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட ஒருசில அரசியல்வாதி களுக்கு எதிரான வழக்குப் பதிவுகளை குறிப்பிடலாம். நாடு சுதந்திரம் அடைந்து 78 வருடங்கள் நிறைவடைந்தாலும் இந்த நாட்டை சொந்தக்காலில் தன்னிறைவு கண்ட நாடாக மலரச் செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளே அவசியமாகின்றன. உல்லாசக் கதைகளாலும் மேடைப் பேச்சுக் களாலும் எதுவும் நடக்கப் போவதில்லை. இந்நிலையில் புதிய அரசியல் அமைப்பொன்றை வரைவது, கல்வி மறுசீரமைப்பு, ஊழலுக்கு எதிரான ஒருசில நடவடிக்கை போன்றவைகள் மக்களை திருப்திப்படுத்தக் கூடியவைகள் அல்ல. எதுவானாலும் இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் பதவிக்கு வந்து இரண்டு வருடங்களில் கடந்த கால முடக்கங்கள் சிலவற்றை மாற்றியமைக்கலாம் என்றும் எதிர்பார்க்க முடியாது. நாட்டின் கால சூழ்நிலை, சர்வதேச மாற்றங்களுக்கு ஏற்ப கல்வி கோட்பாடுகளில் மாற்றங்கள் அவசியமாகின்றன. ஆனாலும் மாற்றத்தின் பெயரில் பொருத்தமற்ற வைகளை உட்புகுத்தல், ஆட்சியாளர்கள் தாம் அடிமைப் பட்டுள்ள குறுகிய நலன்களை அடையும் இலட்சியங்களை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியாக அந்த மாற்றங்கள் இடம்பெறக்கூடாது.

அதேபோன்றுதான் அரசியல் அமைப்பு மறுசீரமைப்பு அல்லது மாற்றங்களிலும் வெளிப்படைத்தன்மை அவசியமாகின்றது. இலங்கை ஒரு பல்லினங்களைக் கொண்ட தேசமாகும். இந்நாட்டில் வாழும், ஏனைய இனங்களான தமிழர்கள், முஸ்லிம்கள், கிரிஸ்தவர்கள் போன்ற இனங்களைச் சேர்ந்த அன்றைய கால தலைவர்களும் இணைந்து ஒன்றுபட்டவர்களாகவே சுதந்திர போராட்டங்களில் பங்கெடுத்து இந்நாட்டை அந்நிய ஆதிக்கத்தின் பிடியில் இருந்து விடுவித்து சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கின்றது. அதனால் பாராளுமன்றத்தில் 159 பலம் இருக்கின்றது என்ற அடிப்படையில் அரசியல் அமைப்பை வரைகின்ற போது இந்நாட்டில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்களது அரசியல் அபிலாசைகளை புறக்கணிக்க முடியாது. பொருளாதார,மத, கலாசார சுதந்திரங்களை பாதுகாத்து எல்லா இனங்களும் அனைத்து விதமான சுதந்திரங்களையும் உரிமைகளையும் அனுபவித்தவர்களாக பாரபட்சமற்ற ஆட்சியில் வாழும் நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் என்பன இத்தகைய சூழ்நிலைகளை உறுதிப்படுத்த அத்தியாவசிய மானதாகும். அவ்வப்போது கொண்டு வரப்படுகின்ற, நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களால் மக்களது இத்தகைய அடிப்படை உரிமைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படாதிருப்பது அவசியமாகின்றது. இன்றைய காலகட்டத்தில் சமூக ஊடகங்களால் இளம்பராயத்தினருக்கு பாரிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. அதன் மூலம் சில நன்மைகள் இருப்பது போன்று மிக மோசமான தீய விளைவுகளும் உள்ளன. 16 வயது பருவத்தினருக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு இந்த சமூக ஊடக பாவனை தடை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன.

2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கொவிட் தொற்றால் ஒன்லைன் கற்றல் விரிவு படுத்தப்பட்டதால் பிள்ளைகள் மத்தியில் இணைய பாவனை மற்றும் ஸ்மார்ட் போன் பாவனை அதிகரித்துள்ளன. அதனால் நாடு இப்போது மிக மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டி ஏற்பட்டிருக்கின்றன. சுதந்திரம் என்ற பெயரில் எதிர்கால சந்ததியினர் பாதிக்கப்பட்டு நெறிப்பிறழ்வு நிலைக்கு தள்ளப்பட்டால் நாம் அனுபவிக்கின்ற சுதந்திரமும் அர்த்தமற்றதாகி விடும். போதைப்பொருள் பாவனை க்கு அடிமையாதலும் இதனோடு இணைந்து மற்றுமொரு அச்சுறுத்தலாகும். அதனால் நாம் உண்மையான சுதந்திரக் காற்றை சுவாசித்து மூச்சு விட சற்று கடினமான நிலை ஏற்பட்டிருப்பதை தளர்த்த தேவையான நடவடிக்கை களின் அவசியம் உணரப்படுகின்றது.

# பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் சுதந்திர தின விழா




**(எம்.ரீ.ஆரிப்)**

78 வது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு பொலன்னறுவை மாவட்ட சுதந்திர தின விழா பிரதி அமைச்சர் ரீ , பீ. சரத் தலைமையில் பொலன்னறுவை மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.

சுதந்திர தின விழா தேசிய கொடி ஏற்றத்துடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டு சுதந்திர மாவீரர்கள் நினைவு கூறல், முப்படை , பொலிசார், சிவில் பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதை மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் ஆகியன இடம்பெற்றன.

இந்த நிகழ்வை பொலன்னறுவை மாவட்ட செயலகம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இதன் போது பொலன்னறுவை மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் ரத்னசிறி, பத்மசிறீ பண்டார பொலன்னறுவை மாவட்ட செயலாளர் சுஜந்த ஏக்கநாயக்க, அரச அதிகாரிகள் சமயத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் இலங்கையின் 78 வது சுதந்திர தின நிகழ்வு




**(இஸட்.ஏ.றஹ்மான்)**

ஒலுவில் பெரிய ஜும்மா பள்ளி வாசல் நம்பிக்கையாளர் சபை அதன் உப குழுக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 78 வது சுதந்திர தின நிகழ்வு ஒலுவில் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் சிரேஷ்ட பொறியாளர் ஏ.எம். றாபி தலைமையில் பள்ளிவாசல் வளாகத்தில் (04) நடைபெற்றது.

இதில் அதிதிகளாக கெப்டன் ஈ.எம்.ஏ.எஸ் ஏக்க நாயக்க ஒலுவில் பொலிஸ் போஸ்ட் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.தௌபீக் மற்றும் ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், பைத்துல் மால்- உறுப்பினர்கள்,பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



உயிவெழைெ.அனுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நலன்புரிச் செயல்த்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர் டப்ளியூ.பைஷலின் புதல்வருக்கான கல்வி மேம்பாட்டு உதவித் தொகை வழங்கும் நிகழ்வும் , மனுசத் தெரண (முதலில் மனித நேயம்) அனுசரணையுடன் அனுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் சங்கத்தின் தலைவர் அப்துல் ஹமீட் தம்சீர் தலைமையில் அனுராதபுரம் பொதுச் சந்தை பகுதியில் அமைந்துள்ள மக்கள் கூட்ட மண்டபத்தில் (31) நடைபெற்றது.

(படம்:- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

# சகாத் பற்றிய விளக்கமளிக்கும் விசேட கூட்டம்



கண்டி உடதலவின்ன மடிகே பைதுஸ் சகாத் அமைப்பு ரமழானை முன்னிட்டு அதன் 40 வது ஆண்டு நிறைவை யொட்டி ஏற்பாடு செய்த சகாத் பற்றிய விளக்க மளிக்கும் விசேட கூட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யன்று உடதலவின்ன அஸ்ஹர் மத்திய கல்லூரி அஸ்ரப் மண்டபத்தில் அதன் தலைவர் தொழிலதிபர் ஆர்.எம். நியாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜா மிஆ கல்விபீட கல்வி அலுவல்களுக்கான பணிப்பாளர் அஷ்ஷெய்க் சீ.அய்யூப் அலி மற்றும் பைதுஸ் சகாத் அமைப்பின் உறுப்பினர்கள், ஊர்ப் பிரமுகர்கள், உலமாக்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் ஜாமிஆ கல்விப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் எம். அப்பாஸ் சகாத் சதகா பற்றிய நீண்ட விளக்கமளித்ததுடன் இவ்வமைப்பின் உதவி செயலாளர் ஜே.எம். சில்மி கடந்த நாற்பது வருட காலங்களில் பைதுஸ் சாகாத் அமைப்புக்குக் கிடைத்த நிதி மூலமாக பிரதேசத்தில் வறிய மக்களது தேவைகள் உட்பட பல்வேறுபட்ட அவசிய நற்பணிகள் என்பன மேற்கொண்டமைக்கான பதிவுகளைக் கொண்ட காணொலியை இயக்கிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

# அருண மாமாவுக்கு கௌரவம் வழங்கிய சீனன்கோட்டை பெண்கள்






**(பீ.எம். முக்தார்)**

பேருவளை பகுதியில் வசிக்கும் முஸ்லிம் பாடசாலை மாணவிகளை 25 ஆண்டுகளுக்கும் மேலாக கொழும்பு பம்பலபிட்டி முஸ்லிம் மகளிர் பாடசாலை மற்றும் இல்மா சர்வதேச பாடசாலை உட்பட ஏனைய சில பாடசாலைகளுக்கு பாதுகாப்பாக பாடசாலை பஸ் வண்டியில் ஏற்றிச் செல்லும் “சிங்கள ஓட்டுநர் மாமா” வை கௌரவிக்கும் வகையில் (01) சீனன்கோட்டை மற்றும் அயல் கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களால் விழா ஒன்று சீனன்கோட்டை எகொடவத்தை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

“அருணா” மாமா என்று பாடசாலை சிறார்களினால் அன்பாக அழைக்கப்படும் 57 வயதான சமன் திலகசிறி என்பவர் பேருவளை பயாகலை விகாரகந்த பகுதியைச் சேர்ந்தவராவார்.

இவர் பெண் மாணவிகளை தங்கள் சொந்த பிள்ளைகளைப் போல் பாடசாலைகளுக்கு ஏற்றிச் சென்று திரும்பவும் தத்தமது வீடுகளுக்கு பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்காக மாணவர்கள் அனைவரும் இணைந்து இந்த கௌரவிப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த விழாவில் நம்பகத்தன்மையுடனும் பாதுகாப்பாகவும் கொண்டு சென்ற திலகசிறிக்கு, அவரின் சேவைகளை கௌரவித்து நினைவுச் சின்னம் மற்றும் பணப் பரிசும் வழங்கப்பட்டதோடு இவ்விழாவில் அவரது மனைவி டி.எச். சுஜாதா குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்வாறான ஒரு விழாவை மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் ஏற்பாடு செய்தமைக்கு சமன் திலகசிறி நன்றி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய கிழக்கை சூழ்ந்துள்ள போர் மேகம்





எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)

ஈரான் தனது பிடிவாதத்தை தளர்த்தி தமது நிபந்தனைகளை ஏற்க வேண்டும் என்று அமெரிக்கா அறிவுரை கூறி வரும் நிலையில் ஈரான் இறுதியில் அதனை ஏற்க முடியாது என்று முழுமையாக மறுத்து விட்ட நிலையில் மத்திய கிழக்கில் மீண்டும் கொதி நிலை உருவாக காரணமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே துருக்கி சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுமா? என்ற கேள்விக்கு இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. ஏனெனில் துருக்கி முழுவதும் அமெரிக்கா சார்பு தேசம் என்பதை உணர்ந்து கொண்ட ஈரான் அரசு தலைமை, இதனை முழுமையாக மறுத்து விட்ட நிலையில், இறுதியாக இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஈரான் கேட்டுக் கொண்ட நிலையில் ஓமானில் பேச்சுவார்த்தை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு வேளை ஈரான் பேச்சு வார்த்தை ஓமானில் நடத்த விடுக்க-ப்பட்ட கோரிக்கை நிறைவேறும் பட்சத்தில் அமெரிக்கா நிபந்தனைகள் எந்த வொரு நிலையிலும் ஈரானால் ஏற்றுக் கொள்ள இயலாது என்று அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராகாசி தெளிவாக கோடிட்டுக் காட்டிய நிலையில் போர் மேகங்கள் சூழ்ந்து இறுக்கமான நிலையில் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

இதற்கிடையே ஈரான் பாரசீக வளைகுடா பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஆப்ரஹாம் லிங்கன் போர்க்கப்பல்கள் சமிக்ஞை கருவிகள் அணைக்கப் பட்ட நிலையில் ஈரான் ஷாஹின் 139 தற்கொலை ட்ரோன்கள் அனுப்பி வேவு பார்க்கும் போது அமெரிக்கா கு35 மூலம் தாக்குதல் நடத்தி ட்ரோன் அழிக்கப்பட்ட நிலையில் மத்திய கிழக்கில் மிகப் பெரிய அளவிலான பதட்டம் தொற்றிக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகவே, சமாதானம் என்பது காணல் நீராக அமைந்துள்ளது.

இந்த நிலையில் ஈரான் நாட்டின் ஷாஹித் 139 ட்ரோன்களை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. ஆனால் உளவுத் தகவல்களை நாங்கள் பெற்றுக் கொண்டோம் என்று ஈரான் ராணுவம் தெரிவித்து இருக்கிறது .

இது ஒரு அறிவிக்கப்படாத போராக தற்போது துவங்கி யுள்ளது என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஈரான் நாட்டின் அதிகாரப்பூர்வ ராணுவ உயர்தர படை பிரிவான ஐ ஆர் ஜி சி யூனிட் ஹெர்மூஸ் பகுதியில் அமெரிக்கா ஆயில் கப்பலை கைது செய்தனர்.

பின்னர் இருதரப்பு பேச்சுவார்த்தை கோடிட்டுக் காட்ட இணக்கமான சூழ்நிலையில் கப்பல் விடுவிப்பு இடம்பெற்றது. இந்த நிலையில் மீண்டும் இரண்டு கப்பல்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் அது எந்த நாட்டின் கப்பல் என்கிற எந்தவொரு விபரத்தையும் ஈரான் வழங்க மறுத்து விட்டது.

இது போன்ற இறுக்கமான சூழ்நிலை உள்ள போது எந்தவொரு நிலையிலும் ஒப்பந்தம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் இஸ்ரேல் கடும் கவனம் செலுத்தி வரும் நிலையில் அமெரிக்கா ஈரான் நாட்டின் மீது தாக்குதல் நடத்த விரும்பவில்லை. மாறாக பேச்சு வார்த்தை நடத்தி அதன் மூலம் தீர்வு எட்டலாம் என்று திட்டங்கள் தீட்டி அதேற்கேற்றார் போல் காய்கள் நகர்த்தப்படுகிறது.

அதே நேரத்தில் தாங்கள் 12 நாட்களில் நடைபெற்ற போரின் போது ஏற்பட்ட இழப்பை அமெரிக்கா மூலம் ஈடு செய்ய வேண்டும் என்று இஸ்ரேல் திட்டம் தீட்டி வருவதாக கூறப்படுகிறது. எனவே இங்கு தான் ஈரானைப் பற்றிய தவறான செய்திகளை அவர்கள் பரப்பி வருகின்றனர் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்கா பேச்சுவார்த்தை நடைபெறும் முன்பே குறிப்பிடத்தக்க நிபந்தனைகள் விதித்து ஏற்று கொள்ள வேண்டும் என்று நிபந்தனைகள் விதித்து உள்ளது. இந்த நிபந்தனைகளை படி..

1) அணு ஆயுத அழிப்பு
2) ஏவுகணை தொழில்நுட்ப அழிப்பு
3) உள்நாட்டு கலவரம் அத்து மீறல்கள் கைவிடல்..
4) போராளிகள் ஆதரவை கைவிட வேண்டும்

ஆனால் எந்தவொரு நிலையிலும் மேற்கண்ட நிபந்தனைகள் எதனையும் தான் ஏற்றுக் கொள்ள இயலாது என்று உச்ச பட்ச தலைவர் கொய்மேனி தெளிவாக தெரியப்படுத்தி உள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவிலான பதட்டம் தொற்றிக் கொண்டது. ஏனெனில் அரபுகள் போர் ஆரம்பித்து விட்டால் தங்கள் நாடுகளில் தொழில் மற்றும் ஸ்திரத்தன்மை முழுமையாக பாதிப்பு அடையும் என்பதை கவனத்தில் கொண்டு போரை நிறுத்த வேண்டும் என்று இரண்டு தரப்பிலும் கெஞ்சி வரும் நிலையில் இதுவரை சாத்தியமான சூழல் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

அதேநேரத்தில் அரபுகள் தொழில் வீழ்ச்சி மற்றும் ஆட்சி கவிழ்ப்பு சாத்தியம் ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும் வகையில் நிலைமை இருப்பதால் ஓமானில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று அமெரிக்காவிடம் கேட்ட நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அரபு நண்பர்கள் ஈரான் நாட்டின் மீது போர் தொடுக்க அதிக அளவில் அஞ்சுகிறது என்று வெளிப்படையாக பகிர்ந்து கொண்டுள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்கா தூதர் ஸ்டீவ் வீடாகாப் இடம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு போராளிகளிடம் இருந்து வரும் எதிர்ப்பு சக்தியை எப்படி கையாள்வது என்பது குறித்து ஆலோசனை மற்றும் ராணுவ பகிர்வு நிலை குறித்து பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக கூறப்படுகிறது.

அதாவது இஸ்ரேல் நாட்டை பொறுத்தவரை போர் எப்படியாவது ஏற்பட்டு விட வேண்டும் என்று பதபதப்பில் இருந்து வரும் நிலையில் அந்த நாட்டின் விசேட தூதுவராக ஐடிஎஃப் படை தளபதி ஈசைல் சமீர் அவசரமாக அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அமெரிக்கா சென்று பெண்டகன் உடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி தற்போது இஸ்ரேல் திரும்பிய நிலையில் போருக்கான அனைத்து விதமான ஏற்பாடுகளையும் இஸ்ரேல் ராணுவம் செய்து வருவதை நாம் காணும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் அரசு தலைமை இந்த போரின் மூலம் அதாவது அமெரிக்கா வை நேரடியாக களத்தில் இறக்கி வெற்றி கண்டு விட்டால் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் தனக்கு எதிராக ராணுவப் பலம் கொண்ட எந்தவொரு தேசமும் இல்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்ட நிலையில் இந்த போரை அமெரிக்கா நடத்தியே ஆக வேண்டும் என்று தொடர்ந்து நிர்ப்பந்தம் வழங்கி வரும் நிலையில் அமெரிக்கா இதற்கு பணிந்து போரில் ஈடுபட இருக்கும் வாய்ப்புகளை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.தற்போதைய நிலையில் ஈரானின் ஃபார்சி தீவின் அருகில் டீசல் உட்பட சுமார் 10 லட்சம் லிட்டர் எண்ணெய்யை ஏற்றிச் சென்ற 2 வெளிநாட்டு எண்ணெய் கப்பல்கள் வியாழக்கிழமை (பிப். 5) சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, எண்ணெய் கப்பல்கள் புஷேர் நகரத்துக்கு கொண்டுச் செல்லப்பட்டதாகவும், அந்தக் கப்பல்களில் இருந்த 15 பணியாளர்கள் சட்டத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளதாகவும், ஈரானின் புரட்சிகர காவல்படையின் அதிகாரி ஜெனரல். ஹெய்தார் ஹோான்ரியன் மொஜாராட் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்தக் கப்பல்கள் எந்த நாட்டுக்குச் சொந்தமானவை எனும் தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. மேலும், அந்தக் கப்பல்கள் எண்ணெய் கடத்தலில் ஈடுபட்டன எனும் குற்றச்சாட்டுகளும் உறுதி செய்யப்படவில்லை.

முன்னதாக, 16 பணியாளர்களுடன் சென்ற வெளிநாட்டு எண்ணெய் கப்பல் ஒன்றைக் கடந்த டிசம்பர் மாதம் ஈரான் அதிகாரிகள் சிறைப்பிடித்தனர்.

இறுதியாக அமெரிக்கா வெளி விவகார துறை அமைச்சர் மார்க்கோ ரூபியோ டொனால்ட் ட்ரம்ப் கட்டளைக்கு அடிபணிய மறுப்பு தெரிவித்தால் போர் தான் நடக்கும். ஏனெனில் உங்களுக்கும் எங்களுக்கும் ஏதும் இல்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது. இதன் மூலம் மேலும் மேலும் பதட்டத்தை அதிகரிக்கும் வகையில் நிலை மாறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே ஈரான் மத்யஸ்தர்கள் மூலம் , ஆம்.. உண்மைதான் என்று கூறி நாங்கள் போருக்கு தயாராக இருப்பதாக அயதுல்லா கொய்மெய்னி தரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சீனா ஈரான் அணு ஆயுத பயன்பாட்டில் ஆக்க பூர்வமான திட்டங்களுக்கு பயன்படுத்தி வருவதைக் ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக அறிவிப்பு செய்துள்ளது.

இறுதியாக இன்று வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு ஓமானில் பேச்சுவார்த்தை நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த அறிவிப்பு மற்றும் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா விதித்துள்ள எந்த வொரு நிபந்தனைகளையும் ஈரான் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் போர் தவிர்க்க இயலாத ஒன்றாக மாறிவிட்டது என்பதே யதார்த்தமான நிலையாகும்.



# கொழும்பு ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலின் சுதந்திர தின விழா





**(ஏ.எஸ்.எம். ஜாவித்)**

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் 78வது தேசிய சுதந்திர தின விழாவின் இஸ்லாமிய சமய நிகழ்வு கொழும்பு -07 இல் அமைந்துள்ள ஜாவத்தை ஜும்ஆப் பள்ளி வாசலில் சமய மற்றும் கலாசார பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தலைமையில் இடம் பெற்றது.

தேசியக் கொடியை பிரதியமைச்சர் ஏற்றி வைத்தார் அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது அதனைத் தொடர்ந்து பள்ளிவாசலின் இரண்டு வேலைத்திட்டங்களுக்கான காட்சிப் பலகைகள் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 78 வது தேசிய தின ஞாபகார்த்தமாக பிரமுகர்களால் பள்ளிவாசல் வளாகத்தில் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற






நிகழ்வில் அதிதிகளின் உரை இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் இலங்கை வக்பு சபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள், உலமாக்கள், பள்ளி வாசல்களின் நம்பிக்கையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

## பதுரியா மாணவன் இளம் கண்டுபணிப்பாளர் போட்டியில் தங்கப்பதக்கம்



**(பாரா தாஹீர்)**

மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியில் தரம் பத்தில் கல்வி கற்கும் எம்.எஸ்.எம்.ஆகிப் இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்று கொண்டார்.

இலங்கை முன்னேற்ற சங்கத்தால் நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் நடைபெற்ற போது இவரது கண்டு பிடிப்பான TV DISTANCE DEFENDER க்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது. இவர் ஏற்கனவே பல புத்தாக்குனர் போட்டிகளில் பங்குபற்றி வலய,மாகாண மற்றும் தேசிய மட்டங்களிலும் பதக்கங்களையும், சான்றிதழ் களையும் பெற்று ஊருக்கும் ,பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்ச்சைக்குரிய சம்மாந்துறை பிரதேச ஆண்டியர் சுற்றுச் சந்தி வழக்கு

**(நூருல் ஹுதா உமர்)**

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக் குட்பட்ட ஆண்டியர் சந்தியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்ட முரணான சுற்றுச் சந்தி கட்டு மானத்திற்கு எதிராக சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல். மாஹிரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு (03) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றின் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வர்த்தமானியின் மூலம் “அபிவிருத்திப் பிரதேசமாக” பிரகடனம் செய்யப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும், குறித்த பிரதேசத்திற்குரிய உள்ளூ



ராட்சி அதிகார சபையின் அனுமதியுடன் மட்டுமே நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இந்நிலையில், சம்மாந்துறை பிரதேச சபையின் முன் அனுமதியின்றி பல்வேறு தொழில்நுட்பக் குறைபாடு களுடன் ஆண்டியர் சந்தியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றுச் சந்தி உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் சட்டமுரணானவை எனக் குறிப்பிட்டு, அவற்றை உடனடியாக நிறுத்துமாறு கோரி இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

## க.பொ.த (சா/த) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான கருத்தரங்கு







**(கே.எ. ஹமீட் )**

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இம்முறை சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்க ளுக்கான “அழுத்தத்தை ஆற்றலாக்கும் கலை வெற்றிக்கான மனப்பான்மை” எனும் தலைப்பில் கல்வி வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் கடந்த 02ஆம் திகதி அட்டாளைச்சேனை தேச- ிய பாடசாலை கேட்போர் கூடத்- தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதான வழவாளராக சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் வைத்தியட்சகர் சனூஸ் காரியப்பர் கலந்து கொண்டார்.

இவ் கருத்தரங்கிற்கு அட்டாளைச் சேனை பிரதேசத்திள் உள்ள தேசிய பாடசாலை, அல்-அர்ஹம் பாடசாலை மற்றும் ஸஹ்றா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் கலந்து கொண்டன. மேலும் இக்கருத்தரங் கில் அமைப்பின் உறுப்பினர்கள், பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







கொழும்பு 12 இல் அமைந்துள்ள நியாஸ் மௌலவி பவுண்டேசனும் இஹ்ஸானியா அரபிக் கலாசாலை மற்றும் பீர்ஸாஹிப் ஜ/ம்ஆப் பள்ளிவாசலும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த சுதந்திர தின நிகழ்வு நியாஸ் மௌலவி பவுண்டேசனின் பணிப்பாளர் லமீர் ஹாபிஸ் தலைமையில் நேற்று (04) இடம்பெற்றது. நிகழ்வில் முன்னாள் கொழும்பு மாநகர மேயர் எம்.ஐ. இக்பால், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா பிரதி நிதிகள் , பேர்ள் (ஙயசட) சிறுவர் பாடசாலை சிறார்கள் மற்றும் ஆசிரியர்கள் , வாழைத்தோட்ட பொலிஸார், கிராம சேவை அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது நியாஸ் மௌலவி பவுண்டேசனால் சகோதர மொழி அதிதிகளுக்கு சிங்கள மொழியிலான அல் குர்ஆன் பிரதிகளுடன் டயரிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சிறுவர் பாடசாலை சிறார்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**(படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

# அரசியல் அடக்குமுறையின் பின்னணியில் மாற்றத்தின் குரலாக உருவான தலைமைத்துவம்..!

முஹம்மது அஸாம் மஜீதி

முஹம்மது ரிசா ஷா பஹ்லவி ஆட்சிக் காலத்தில் ஈரான் ஒரு முழு அதிகாரம் கொண்ட அரசாட்சியாக இருந்தது. அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் மன்னரின் கைகளில் வித்திட்டிருந்திருந்தன. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்றம் இருந்தாலும், அதற்கு உண்மையான அதிகாரம் வழங்கப்படவில்லை. அரசுக்கு எதிரான அரசியல் கட்சிகள், இயக்கங்கள் மற்றும் கருத்துகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டன. கருத்து சுதந்திரம், அரசியல் பங்கேற்பு போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகள் மக்களுக்கு மறுக்கப்பட்டன.

ஷா ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக SAVAK என்ற ரகசிய காவல் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு அரசுக்கு எதிராக செயல்படுவதாக சந்தேகிக்கப்பட்ட வர்களை கண்காணித்து, கைது செய்து, கடுமையான விசாரணைகள் மற்றும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தியது. மாணவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை யாளர்கள், மத அறிஞர்கள் உள்ளிட்ட பலர் இந்த அடக்குமுறைக்கு பலியாகினர். இதனால் சமூகத்தில் பயம் நிறைந்த சூழல் உருவானது மக்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படையாக கூற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த தொடர்ச்சியான அரசியல் அடக்குமுறை மக்கள் மத்தியில் ஆழ்ந்த அதிருப்தியை உருவாக்கியது. அரசின் மீது இருந்த பயம், காலப்போக்கில் கோபமாக மாறியது. அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதும், மனித உரிமைகள் மீறப்பட்டதும் மக்கள் மனங்களில் வெடிப்பை ஏற்படுத்தியது. இதுவே 1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சிக்கு வழிவகுத்த முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்தது.



### மதம் மற்றும் கலாச்சாரத்திற்கு எதிரான கொள்கைகள்

முஹம்மது ரிசா ஷா பஹ்லவி ஆட்சிக்காலத்தில், ஈரான் சமூகத்தில் மதம் மற்றும் பாரம்பரிய கலாச்சாரத்திற்கு எதிரான பல கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஷா, ஈரானை ஒரு நவீன மேற்கு நாடாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில் மேற்கு மயமாக்கல் (Westernization) கொள்கையை தீவிரமாக முன்னெடுத்தார். இந்தக் கொள்கையின் மூலம், மேற்கத்திய வாழ்க்கை முறை, உடை, கல்வி மற்றும் சமூக மதிப்பீடுகள் ஈரான் சமூகத்தில் கட்டாயமாக அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் பாரம்பரிய இஸ்லாமிய மதிப்புகள் மற்றும் ஈரானிய கலாச்சாரம் புறக்கணிக்கப்பட்டதாக பலர் உணர்ந்தனர். மேலும், ஷா ஆட்சி மார்க்க அறிஞர்களின் சமூக மற்றும் அரசியல் செல்வாக்கை குறைக்கும் நடவடிக்கைகளை எடுத்தது. மார்க்கக் கல்வி நிறுவனங்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. மார்க்கத் தலைவர்கள் அரசியலில் தலையிடக் கூடாது எனக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால், நீண்ட காலமாக சமூக வழிகாட்டிகளாக இருந்த மார்க்க அறிஞர்கள் ஒதுக்கப்பட்டனர் அவர்களின் குரல் அடக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள், மார்க்க சமூகத்தில் ஆழ்ந்த அதிருப்தியை உருவாக்கின.

அதேபோல், இஸ்லாமிய சட்டங்கள் (ஷரீஅத்) பல துறைகளில் புறக்கணிக்கப் பட்டன. குடும்பச் சட்டம், நீதித்துறை மற்றும் சமூக ஒழுங்குமுறைகளில் மேற்கத்திய சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இதை பல மதநம்பிக்கையுள்ள மக்கள், தங்கள் நம்பிக்கைக்கும் வாழ்க்கை முறைக்கும் எதிரான நடவடிக்கையாகக் கருதினர். அரசின் இந்த அணுகுமுறை, "இஸ்லாமிய அடையாளத்தை திட்டமிட்டு அழிக்கும் முயற்சி" என பொதுமக்கள் மத்தியில் பரவலான கருத்தை உருவாக்கியது. இதன் விளைவாக, மதம் மற்றும் கலாச்சாரத்தின் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக உணர்ந்த மக்கள், ஷா ஆட்சிக்கு எதிராக ஒன்றிணையத் தொடங்கினர். மத உணர்வுகள் அரசியல் எதிர்ப்பாக மாறின. இந்த மத- கலாச்சார அதிருப்தி தான், 1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சியில் மக்களை பெருமளவில் ஈடுபடச் செய்த முக்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்தது.

### பொருளாதார சமநிலையின்மை மற்றும் மக்கள் அதிருப்தி

முஹம்மது ரிசா ஷா பஹ்லவி ஆட்சிக் காலத்தில் ஈரான் பெரும் எண்ணெய் வருமானம் பெற்ற நாடாக இருந்தது. குறிப்பாக 1970-களில் எண்ணெய் விலைகள் உயர்ந்ததால், நாட்டிற்கு மிக அதிகமான வருவாய் கிடைத்தது. அரசு இதை "தேசிய வளர்ச்சி" மற்றும் "நவீனமயமாக்கல்" என்ற பெயரில் பெரும் திட்டங்களில் செலவிட்டது. வெளிப்படையாகப் பார்க்கும்போது, ஈரான் பொருளாதார ரீதியாக முன்னேறுவது போலத் தோன்றினாலும், அந்த வளர்ச்சி சமூகத்தின் அனைத்து தரப்புகளுக்கும் சமமாக சென்றடையவில்லை.

இந்த பொருளாதார வளர்ச்சியின் பலன் பெரும்பாலும் அரசுக்கு நெருக்கமானவர்கள், உயர்வர்க்கத்தினர் மற்றும் அதிகாரத்தில் இருந்தவர்களுக்கே சென்றது. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக மாறினர் ஆனால் பொதுமக்கள், குறிப்பாக கிராமப்புற மக்கள் மற்றும் தொழிலாளர் வர்க்கம், வறுமையிலிருந்து விடுபட முடியாமல் இருந்தனர். சமூகத்தில் வருமான இடைவெளி அதிகரித்தது. ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த ஒரு சிறிய வர்க்கம் ஒருபுறமும், அடிப்படை தேவைகளுக்கே போராடிய பெரும்பான்மையான மக்கள் மறுபுறமும் என்ற நிலை உருவானது,

மேலும், வேகமான நகரமயமாக்கலும் தொழில்மயமாக்கலும் எதிர்பார்த்த அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவில்லை. கல்வி பெற்ற இளைஞர்கள் வேலை இல்லாமல் தவித்தனர். கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வந்த பலர் நிலையான வேலைகளை பெற முடியாமல், வறுமையும் ஏமாற்றமும் நிறைந்த வாழ்க்கையை எதிர்கொண்டனர். இதனுடன் அரசத் துறைகளில் நிலவிய ஊழல், பொருளாதார அநீதியை மேலும் தீவிரப்படுத்தியது. அதிகாரம் கொண்டவர்களின் முறைகேடுகள் மற்றும் சுயநல செயல்கள் மக்கள் மத்தியில் அரசின் மீது நம்பிக்கையின்மையை ஏற்படுத்தின. இந்த சூழ்நிலையில், மக்கள் "நாடு பணக்காரமயமாகிறது ஆனால் நாங்கள் இல்லை" என்ற உணர்வை ஆழமாக அனுபவித்தனர். பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும், தங்களின் வாழ்க்கை தரம் மேம்படவில்லை என்ற எண்ணம் பொதுமக்கள் மத்தியில் வலுவடைந்தது. இந்த பொருளாதார சமநிலையின்மை, அரசியல் மற்றும் சமூக அதிருப்தியுடன் இணைந்து, ஷா ஆட்சிக்கு எதிரான கோபத்தை அதிகரித்தது. இதுவே 1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சிக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

### அமெரிக்கா மீது உருவான கோபமும் தேசிய அவமதிப்பு உணர்வும்

முஹம்மது ரிசா ஷா பஹ்லவி ஆட்சிக் காலத்தில் ஈரான் மக்களிடையே அமெரிக்காவிற்கு எதிரான கோபம் மெதுவாகவும் ஆழமாகவும் உருவானது. இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று 1953 ஆம் ஆண்டு நடந்த அரசியல் தலையீடு ஆகும். அந்த ஆண்டில், ஈரானின் மக்கள் ஆதரவு பெற்ற பிரதமர் முகம்மது மோசாதெக், எண்ணெய் தொழில்துறையை தேசியமயமாக்க முயன்றார். இதை ஏற்க மறுத்த அமெரிக்கா மற்றும் பிரிட்டன், ஊஐயு ஆதரவுடன் ஒரு மறைமுக புரட்சியை ஏற்படுத்தி மோசாதெக்கை பதவி நீக்கம் செய்தனர். இதன் மூலம், ஷா மீண்டும் முழு அதிகாரத்துடன் ஆட்சியில் அமர்த்தப்பட்டார். இந்த நிகழ்வு, ஈரான் மக்களின் நினைவில் ஒரு ஆழமான காயமாக பதிந்தது. தங்களின் ஜனநாயகத் தீர்மானம் வெளிநாட்டு சக்திகளால் அழிக்கப்பட்டதாக மக்கள் உணர்ந்தனர்.

அதன் பின்னரும், அமெரிக்கா தொடர்ந்து ஷா ஆட்சிக்கு அரசியல், பொருளாதார மற்றும் ராணுவ ஆதரவை வழங்கியது. ஈரானின் அடக்குமுறை ஆட்சி, மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் அடக்குமுறைகள் அனைத்தையும் அமெரிக்கா புறக்கணித்து, ஷாவை ஒரு நம்பகமான கூட்டாளியாகவே பார்த்தது.

மேலும், ஈரான்-அமெரிக்கா இடையே ராணுவ மற்றும் உளவுத்துறை ஒத்துழைப்பு வலுப்பெற்றது. ஈரான் அமெரிக்க ஆயுதங்களை பெருமளவில் வாங்கியதும் SAVAK போன்ற ரகசிய காவல் அமைப்புகளுக்கு வெளிநாட்டு ஆதரவு இருந்ததாகவும் கூறப்பட்டது. இதனால், ஷா ஆட்சி முழுவதும் அமெரிக்காவின் ஆதரவால் தான் நிலைத்திருக்கிறது என்ற எண்ணம் மக்களிடையே வலுவடைந்தது. ஷா, ஈரானின் சுயாதீனத் தலைவர் அல்ல் மாறாக, அமெரிக்காவின் நலன்களை பாதுகாக்கும் ஒரு கருவி என்ற பார்வை உருவானது. இந்த வெளிநாட்டு தலையீடும் ஆதரவும், ஈரான் மக்களின் தேசிய மரியாதையை பாதித்தது. "நமது நாட்டை நாமே ஆள முடியாத நிலை என்ற அவமான உணர்வு, அரசியல் எதிர்ப்பை மேலும் தீவிரப்படுத்தியது. இதன் விளைவாக ஷாவை மக்கள் அமெரிக்காவின் பொம்மை" எனக் கருதத் தொடங்கினர். இந்த அமெரிக்கா எதிர்ப்பு உணர்வு, மத மற்றும் அரசியல் எதிர்ப்புடன் இணைந்து, 1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சியில் முக்கிய பங்காற்றிய ஒரு வலுவான காரணமாக அமைந்தது.

### இமாம் ஹ் குமைனீ மாற்றத்தின் குரலாக உருவான தலைவர்.

1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சியில் இமாம் ரூஹுல்லாஹ் குமைனீ முக்கியமான மற்றும் தீர்மானிக்கும் பங்கு வகித்தார். அவர் ஒரு மதத் தலைவர் மட்டுமல்ல் அரசியல், சமூக மற்றும் கலாச்சார மாற்றங்களை ஒருங்கிணைத்த ஒரு சக்திவாய்ந்த குரல-ாகவும் உருவெடுத்தார். ஷா ஆட்சியின் அரசியல் அடக்குமுறை, சமூக அநீதி மற்றும் மத-கலாச்சார ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அவர் முன்வைத்த எதிர்ப்பு, ஈரான் மக்களை ஒன்றிணைக்கும் மையமாக அமைந்தது. இமாம் குமைனீ, மதத்தையும் அரசியலையும் தனித்தனியாகப் பார்க்காமல், இரண்டையும் ஒன்றிணைத்த ஒரு எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கினார். அவர் இஸ்லாம் என்பது வெறும் வழிபாட்டுக்கான மதம் அல்ல் அநீதிக்கும் அடக்குமுறைக்கும் எதிராக நிற்கும் ஒரு முழுமையான வாழ்க்கை வழிமுறை என்று வலியுறுத்தினார். "அநீதி ஆட்சிக்கு எதிராக இஸ்லாம்" என்ற அவரது செய்தி, ஷா ஆட்சியால் ஒடுக்கப்பட்ட மக்களின் மனங்களில் ஆழமாக பதிந்தது. இந்த கருத்து, அரசியல் போராட்டத்திற்கு மத அடையாளம் மற்றும் நெறிமுறை நியாயத்தை வழங்கியது.

இமாம் குமைனீயின் உரைகள் மற்றும் செய்திகளின் இன்னொரு முக்கிய அம்சம், அவை எளிய மக்களுக்கு புரியும் மொழியில் இருந்ததுதான். சிக்கலான அரசியல் கோட்பாடுகள் அல்லது கல்விசார் சொற்களை பயன்படுத்தாமல், அவர் சாதாரண மக்களின் அனுபவங்களையும் வேதனைகளையும் நேரடியாகப் பேசினார். இது விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் அவருடன் இணைத்தது. மக்கள் தங்களின் குரலை வெளிப்படுத்தும் ஒரு தலைவரை அவரில் கண்டனர். குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இமாம் குமைனீ புரட்சியின் பெரும்பாலான காலகட்டத்தில் ஈரானுக்குள் இல்லாமல் வெளிநாட்டில் இருந்தார். இருப்பினும், அவரது உரைகள், எழுத்துகள் மற்றும் ஒலிப்பதிவுகள் ஈரானுக்குள் பரவின. உடல் ரீதியாக நாட்டுக்குள் இல்லா விட்டாலும், அவர் மக்கள் மனங்களில் மாற்றம் அற்ற தலைவராக மாறினார். ஷா ஆட்சிக்கு எதிரான போராட்டத்திற்கு திசை காட்டிய சின்னமாகவும் நம்பிக்கையின் அடையாளமாகவும் அவர் திகழ்ந்தார்.



இதனால், இமாம் குமைனீ ஈரான் புரட்சியில் ஒரு தனி நபராக அல்ல் மாற்றத்தை வழிநடத்திய ஒரு கருத்தாகவும், ஒரு இயக்கமாகவும் உருவெடுத்தார். அவரது தலைமையும் சிந்தனையும், 1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சி வெற்றியடைய முக்கிய காரணமாக அமைந்தது.

### பல தரப்புகள் ஒன்றிணைந்த புரட்சிச் சக்தி

1979 ஆம் ஆண்டு ஈரான் புரட்சியின் முக்கிய தனித்துவம், சமூகத்தின் பல்வேறு தரப்புகள் ஒரே இலக்கிற்காக ஒன்றிணைந்ததுதான். சாதாரணமாக அரசியல் போராட்டங்களில் கருத்து வேறுபாடுகள் காரணமாக சமூகக் குழுக்கள் பிரிந்து நிற்பது வழக்கம். ஆனால் ஷா ஆட்சியின் அடக்குமுறை, அநீதி மற்றும் வெளிநாட்டு சார்பு காரணமாக, வெவ்வேறு சிந்தனைகளும் பின்னணிகளும் கொண்ட மக்கள் ஒரே எதிர்ப்புக் குரலாக இணைந்தனர். இந்த புரட்சியில் மத அறிஞர்கள் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் மதம், சமூக நீதி மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியவற்றை இணைத்து மக்களை வழிநடத்தினர். பள்ளிகள் எதிர்ப்பு இயக்கங்களின் மையமாக மாறின. அதே நேரத்தில், மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் இருந்து போராட்டங்களை முன்னெடுத்து, அரசியல் விழிப்புணர்வை பரப்பினர். அவர்கள் ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள் மற்றும் கருத்துப் பரப்பல்கள் மூலம் புரட்சிக்கு வேகம் கொடுத்தனர்.

தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களும் புரட்சியில் முக்கிய பங்களிப்பு செய்தனர். குறிப்பாக எண்ணெய் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்கள், அரசின் பொருளாதார ஆதாரங்களை கடுமையாக பாதித்தன. இதனால், ஷா ஆட்சியின் நிர்வாக அமைப்பு செயலிழக்கத் தொடங்கியது. இதேபோல், சமூக நீதி மற்றும் சமத்துவத்தை வலியுறுத்திய இடதுசாரி இயக்கங்களும் ஷா ஆட்சிக்கு எதிராக செயல்பட்டன. அவர்கள் அரசியல் அடக்குமுறை மற்றும் பொருளாதார அநீதியை தீவிரமாக விமர்சித்தனர்.

மேலும், நடுத்தர வர்க்கம்-ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், வணிகர்கள், புத்திஜீவிகள்- புரட்சியில் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். கல்வி பெற்றிருந்தாலும் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டதும், வாழ்க்கை நிலை மேம்படாததும், இவர்களை ஆட்சிக்கு எதிராக நிற்கச் செய்தது. இவ்வாறு சமூகத்தின் பல தரப்புகளும் தங்கள் தனிப்பட்ட காரணங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டாலும், அவர்களை இணைத்த ஒரே பொதுவான இலக்கு இருந்தது,

அந்த இலக்கு, ஷா ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதேயாகும். கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், ஷா ஆட்சியின் முடிவே முதன்மை என்ற எண்ணம் அனைவரையும் ஒன்றிணைத்தது. இந்த பரந்த சமூக ஒற்றுமை தான், ஈரான் புரட்சியை வெறும் ஒரு குழுவின் கிளர்ச்சியாக இல்லாமல், ஒரு தேசிய மக்கள் இயக்கமாக மாற்றியது. இதுவே 1979 ஆம் ஆண்டு புரட்சி வெற்றியடைய முக்கிய காரணமாக அமைந்தது.

### 1978-1979 நிகழ்வுகள் மற்றும் புரட்சியின் வெற்றி

1970-களின் இறுதியில், ஈரானில் நீண்ட காலமாக குவிந்து வந்த அரசியல், சமூக, பொருளாதார மற்றும் மத சார்ந்த அதிருப்திகள் ஒரு இறுதி வெடிப்பாக வெளிப்பட்டன. 1978-1979 காலகட்டம், ஈரான் புரட்சியின் தீர்மானிக்கும் கட்டமாக அமைந்தது. இதற்கு முன்பு தனித்தனியாக வெளிப்பட்ட எதிர்ப்புகள், இந்த காலத்தில் தொடர்ச்சியான மற்றும் பரவலான மக்கள் இயக்கமாக மாறின.

1978 ஆம் ஆண்டில், நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து போராட்டங்கள் வெடித்தன. மாணவர்கள், தொழிலாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் வீதிகளில் இறங்கினர். இந்த போராட்டங்கள் ஒரே நகரத்திற்குள் மட்டுமல்லாமல், நாடு முழுவதும் பரவின. அரசு கடுமையான அடக்குமுறைகளையும் இராணுவ நடவடிக்கைகளையும் பயன்படுத்தினாலும், மக்கள் போராட்டங்கள் அடங்கவில்லை. மாறாக, ஒவ்வொரு அடக்குமுறையும் மக்கள் கோபத்தை மேலும் அதிகரித்தது.

இதனுடன், வேலைநிறுத்தங்கள் புரட்சியை புதிய கட்டத்திற்கு கொண்டு சென்றன. குறிப்பாக எண்ணெய் தொழில்துறையில் நடைபெற்ற வேலைநிறுத்தங்கள், அரசின் முக்கிய வருமான மூலங்களை முற்றிலும் பாதித்தன. அரசு நிர்வாகம் செயலிழக்கத் தொடங்கியது் அடிப்படை சேவைகள் கூட பாதிக்கப்பட்டன. தொழிலாளர்களின் இந்த ஒற்றுமையான நடவடிக்கை, ஷா ஆட்சியின் பொருளாதார அடித்தளத்தை குலைத்தது. இதே நேரத்தில், ஷா ஆட்சியின் மீது இருந்த படை ஆதரவு சிதறத் தொடங்கியது.

இராணுவம் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், தொடர்ந்து நடைபெறும் போராட்டங்களை அடக்குவதில் தயக்கம் ஏற்பட்டது. சில பகுதிகளில் படையினர் மக்கள் மீது தாக்குதல் நடத்த மறுத்தனர் சிலர் நேரடியாக புரட்சியாளர்களுடன் சேர்ந்தனர். இதனால், ஷா ஆட்சியின் கடைசி பாதுகாப்புக் கவசமும் பலவீனமடைந்தது. இந்த சூழ்நிலையில், 1979 ஆம் ஆண்டு முஹம்மது ரிசா ஷா பஹ்லவி ஈரானை விட்டு வெளியேறினார். இது, அவரது ஆட்சியின் முடிவை அதிகாரப்பூர்வமாக அறிவித்த ஒரு முக்கிய நிகழ்வாகும். அதனைத் தொடர்ந்து, இமாம் குமைனீ தலைமையில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. பொதுமக்களின் ஆதரவுடன் இஸ்லாமிய குடியரசு அறிவிக்கப்பட்டது.

இந்த இறுதி வெடிப்பு, பல ஆண்டுகளாகச் சேர்ந்து வந்த மக்களின் அதிருப்தி, எதிர்ப்பு மற்றும் போராட்டங்களின் இயல்பான விளைவாக அமைந்தது. 1978- 1979 நிகழ்வுகள், ஈரான் வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையாக இருந்து, நாட்டின் அரசியல் மற்றும் சமூக திசையை முழுமையாக மாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் 78ஆவது சுதந்திர தினம் அனுஷ்டிப்பு





**(எம்.எஸ்.எம். ஸாகிர்)**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 78 ஆவது சுதந்திர தினம் (04) புதன்கிழமை சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் முன்றலில் பிரமாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது. சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், உலமாக்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், சாய்ந்தமருது ஜம்இய்யத்துல் உலமா, ஜமாஅத்தினர்கள் மற்றும் பொதுமக்கள் புடைசூழ ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் எம்.எஸ்.எம். முபாரகினால் தேசிய கொடி ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.ஜே.டி.சில்வா உட்பட ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர், பொருளாளர், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், அதன் நிர்வாக உத்தியோக த்தர்கள் மற்றும் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஏனைய பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் பாடசாலையின் 64 ஆவது அகவை தினத்தில் கௌரவிக்கப்பட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்




**(சியாஜ்)**

புத்தளம் கல்வி வலயத்தில் கடந்த 13 வருடங்களாக , கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்கான உதவி, பிரதி கல்விப்பணிப்பாளராகவும், அத்தோடு கடந்த 4 வருடங்களாக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளராக சேவையாற்றி வரும் ஏ. எம். அனீஸின் சேவையை பாராட்டி கௌரவிக்கப்பட்டது. கடந்த திங்கட்கிழமை (02) புத்தளம் பாத்திமா பாலிக்கா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கல்லூரி தின நிகழ்வின் போது, பிரதிக் கல்வி பணிப்பாளர் ஏ.எம் அனீஸ் பாடசாலையின் அதிபரினால் பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டதுடன் அன்பளிப்புக்களும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உக்குவளை சந்தியில் கடைத் தொகுதிகள் நிர்மாணம்



**(உக்குவளை ஜெலீல்)**

உக்குவளை பிரதேச சபையின் தலைவர் நிமல் கருனாதிலக்கவின் ஆலோசனையில் உக்குவளை நகரில் ஐந்து சந்தைக் கடைத்தொகுதி யொன்றை நிர்மானித்துள்ளது. அரச மத்திய மாகாண முதலமைச்சு முலமாக வழங்கிய சுமார் முப்பது இலட்சம் ஷரூபா செலவில் நிர்மானிக்கப்பட்ட இச் சந்தைக் கடைத் தொகுதி தவணை அடிப்ப டையில் தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படவிருப்பதாக இச்பையின் உதவித் தலைவர் எம்.ராபி தெரிவித்தார்.




தர்ஹா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையமும், அமீர் ஹாஜியார் குர்ஆன் மத்ரஸாவும் இணைந்து ஏற்பாடு செய்த 78வது சுதந்திர தின கொண்டாட்டம் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய வளாகத்தில் நடைபெற்றது. அதன் இஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு, நிலையப் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும், குர்ஆன் மத்ரஸா விரிவுரையாளர்களும், மாணவர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**(படம்:பீ.எம். முக்தார்)**

# அம்பாறை மாவட்ட செயலகத்தின் 78வது சுதந்திர தின நிகழ்வுகள்





**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்- மத்திய முகாம் செய்தியாளர்)**

"இலங்கையைக் கட்டியெழுப்புவோம்" என்ற கருப்பொருளின் கீழ் நாட்டின் 78வது சுதந்திர தின நிகழ்வுகள் நாடு முழுவதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய தினம் (2026.02.04) அம்பாறை மாவட்ட செயலகத்திலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தாக அபேவிக்ரம தலைமையில், மேலதிக அராசாங்க அதிபர் ஜொகராஜனின் ஒருங்கிணைப்பிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் வஸ ந்த பியதிஸ்ஸ மற்றும் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுளா ரத்னாயக்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 78வது சுதந்திர தினமான இன்றைய நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வஸந்த பியதிஸ்ஸவினால் தேசிய கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நாட்டின் உயிர் நீத்தவர்களுக்காகவும் இராணுவ வீரர்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், இலங்கை நாட்டின் சுதந்திரம் தொடர்பான தலைமை உரையினை அம்பாறை அரசாங்க அதிபர் சிந்திக்க அபே விக்கிரமா நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து அதிதிகளின் உரையும் இடம்பெற்றதுடன் பலன் தரும் மரக்கன்றும் நடப்பட்டது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட தலைமைபீட பொலிஸ் பொறுப்பதிகாரி , அம்பாறை மாவட்ட இராணுவ படைத்தளபதி, விஷேட அதிரடிப் படை தளபதி, உஹன விமானப்படைத் தளபதி, அக்கரைப்பற்று பிரதேச பொலிஸ்மா அதிபர், சர்வ மதத் தலைவர்கள் மற்றும் மாவட்ட செயலக பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# களப்பணியாளர்களுக்கான கௌரவிப்பு



**(யூ.கே. காலித்தீன்)**

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் களப்பணி யாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஸூரா சபையின் தலைவர் அஷ்ஷேய்க் எம்.ஐ.ரஃபி (ஹிழ்ரி) தலைமையிலும் ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் பொதுச் செயலாளர் யூ.கே.காலித்தீனின் நெறிப்படுத்தலிலும் நடைபெற்ற நிகழ்வானது சாய்ந்தமருது லீமெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் (27) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் செயலாளர் எம்.எம். ஆஸிக் கலந்து கொண்டதோடு சாய்ந்தமருது ஜம்மிய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷேய்க் எம்.எம். சலீம் (ஸர்க்கி) கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

பேரவையின் தலைவர் அப்துல் ஸலாம் அஸ்வரின் தலைமை உரையுடனும், வரவேற்புரையுடனும் ஆரம்பமான நிகழ்வில் உன்னதமான பணியினை மேற்கொண்ட பேரவையின் ஆரம்பகால தன்னார்வ களப்பணியாளர்களான ஏ.எம்.ஹம்ஸ ா, ஐ.எல். சமீத் (இக்பால்) மற்றும் எம்.ஏ.எம். அனஸ் ஆகியோருக்கான கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

பேரவையின் அச்சானியாக இருந்து இப்பிராந்தியத்தில் வாழ்கின்ற சமூகத்தினரை திரும்பி பார்க்க வைத்த உன்னத சேவையினை செய்து வந்த பேரவையின் தலைவர் அப்துல் ஸலாம் அஸ்வர் தனது தனிப்பட்ட வேலை நிமிர்த்தம் பிரித்தானியாவுக்கு செல்ல விருக்கின்ற இவ்வேளை ஸூரா சபையினராலும், ஜனாஷா பேரவையின் களப்பணியாளர்களாலும் நினைவுச் சின்னமும் பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

## சிதைந்த நிலத்தில் முளைத்த கதைகள்

**(வெள்ளத்தில் சிக்கி, உயிரோடு மீண்டு, இன்று அமைதியாக துயரத்தை சுமந்து வாழும் ஒரு தாயின் மனக் குரல்தான் இந்தக் கட்டுரை. இது உதவிக்கு எதிரான குரல் அல்ல. மாறாக, மனித மரியாதையை மதிக்கும் விதத்தில் உதவி வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு தாயின் பணிவான வேண்டுகோள்... எழுத்தாக பதிக்கப்படுகிறது)**



# “உதவிக்குள் மறைந்துள்ள தாயின் குரல்”

நான் நான்கு பிள்ளைகளின் தாய். வெள்ளத்துக்குப் பிறகு என் வாழ்க்கை முற்றிலும் மாறிவிட்டது. என் கணவர் தினக்கூலி தொழிலாளி. எங்கள் குடும்பத்தின் ஒரே வருமான வளம் அவர்தான். ஒரு நாளைக்கு சுமார் ரூ. 1,600 சம்பாதிக்கிறார். அதிலிருந்தே உணவு, கல்வி, வாடகை, மற்றும் குடும்பத்தின் அனைத்து தேவைகளையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

வெள்ளம் வந்தபோது, எங்கள் வாழ்க்கை மேலும் கடினமானதாக மாறியது. என் கணவர் சுமார் 45 நாட்கள் வேலை இழந்திருந்தார். அந்த நாட்கள் பயமும், கவலையும், அமைதியான கண்ணீரும் நிறைந்த நாட்களாக ஆகின. எங்கள் பிள்ளைகளுக்கு உணவு மற்றும் அவர்களின் கல்வித் தேவைகளை எப்படி நிறைவேற்றுவது என்ற அச்சம் எங்கள் வாழ்க்கை வானில் கருப்பு மேகமாய் வியாபித்திருந்தது. சமீபத்தில் அவர் முன்பு வேலை செய்த கடையில் மீண்டும் சேர்ந்தார். அது எமக்கு ஒரு ஆறுதல் பெருமூச்சாகியது. அதற்காக நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டு இருக்கிறோம். வறுமையின் வேதனையை உள்ளுக்குள் அடக்கிக் கொண்டு வாழ்கின்ற குடும்பங்களில் நாமும் ஒரு குடும்பம்.

வெள்ளம் நிகழ்ந்த ஆரம்பத்தில் பல அமைப்புகள் எங்களைப் போன்ற குடும்பங்களுக்கு உதவி செய்தன. உணவு, உலர் உணவுப் பொருட்கள், உடைகள், வீட்டுப் பொருட்கள் என பலவற்றை வழங்கின. அது எங்களுக்கு ஒரு பெரிய மன ஆறுதலை தந்தது. வாழ்க்கையில் கண்டில்லாத பல சகோதரர்கள் எங்கள் அழுக்கடைந்த வீடுகளை அழகாக சுத்தமாகித் தந்தார்கள். அவர்கள் யார் என்றே எமக்குத் தெரியாது.

அந்த இருண்ட நாட்களில் அந்த உதவிகள் நமக்கு மிகப்பெரிய நம்பிக்கையளித்தன. அதற்காக நாங்கள் மனப்பூர்வமாக நன்றி செலுத்துகிறோம். ஆனால் ஒரு வேதனையான விடயத்தை இங்கு மரியாதையுடன் பகிர வேண்டியுள்ளது.

இன்றும் சில அமைப்புகள், நிறுவனங்கள் எங்களுக்கு உதவி செய்கின்றன. அதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஆனால், சில சமயங்களில் பாடசாலை அல்லது பொது மண்டபங்களில் அனைவரின் முன்னிலையில் எங்களை அழைத்து, உதவிப் பொருட்களை வழங்கப்படுகின்றன. இது எமக்கு ஒருவிதமான சங்கடத்தையும், மனக் கசப்பையும் உணர வைக்கிறது.

சமீபத்தில், என் 17 வயது மகள் மேடைக்கு அழைக்கப்பட்டு பாடசாலைக்கு தேவையான சில பொருட்களை பெற வேண்டியிருந்தது. அது அவளுக்கு மிகுந்த சங்கடத்தையும் வெட்கத்தையும் ஏற்படுத்தியது. அவள் கண்களில் நான் அந்த உணர்வுகளை பார்த்தேன். என் வழிகளும், அண்டை வீட்டாரும் இதே உணர்வில் இருக்கிறார்கள். பலர் தேவையிருந்தும் பொது இடங்களில் அவற்றை பெற மறுக்கிறார்கள். காரணம் அது அவர்களின் மரியாதையை காயப்படுத்துவதாக அவர்கள் நினைக்கலாம்.

சமீபத்தில் சமூக ஊடகமொன்றில் என் சில நண்பிகள் “உணவுப் பொதி வழங்கும் நிகழ்ச்சியில் நிற்பதைப் பார்த்தேன். அந்த புகைப்படங்கள் என் மனதை உடைத்தன. பெண்களாக, தாய்களாக, எங்கள் துன்பம் உலகுக்கு ஒரு காட்சியாக மாறுவதை எங்களால் தாங்க முடியாதிருக்கிறது.

நாங்கள் நன்றியற்றவர்கள் அல்ல. உதவி வேண்டாம் என்று சொல்பவர்களும் அல்ல.

ஆனால் எங்கள் உணர்வுகள் புரியப்பட வேண்டும் என்பதே எங்கள் கனிவான வேண்டுகோள்.

அதனால் மிகுந்த பணிவுடன், உதவி வழங்கும் அமைப்புகள், இந்த உதவிகளை முடியுமான அளவு ரகசியமாகவும் தனியுரிமையுடனும் வழங்கினால் மிகவும் அழகாகவும் இன்னும் கௌரவமாகவும் இருக்கும் என்று நினைக்கிறோம். நீங்கள் எங்களுக்காக செய்கின்ற இந்த உயர்ந்த பணியில் ஒரு சிறிய மாற்றமே, எங்களைப் போன்ற குடும்பங்களின் மன உணர்வுகளின் வலிகளை குறைக்க காரணமாகலாம். எங்கள் மீதான சுயமரியாதையை பாதுகாக்க வாய்ப்பாகலாம்.

எங்களுக்காக உதவிக்கரம் நீட்டும் அனைவரினதும் வெற்றிக்காக பிரார்த்திக்கிறோம்.


இது ஒரு தாயின் கதை மட்டுமல்ல. இது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல தாய்களின் அமைதியான குரல்.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

## வாசிப்பீராக! 39



**பிஸ்தாமி அஹமத்**

# வாசிப்பும் ஒழுங்கமைப்பும்

வாசிப்பு தற்செயலான ஒரு நிகழ்வாகவோ மந்திர செயல்பாடாகவோ ஒருபோதும் நிகழவே நிகழாது. அதற்காக நாம் பகீரத பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டும். வாசிப்பு ஒரே நேரத்தில் கலையாகவும் விஞ்ஞானமாகவும் இருப்பது போலவே அது மிகப்பெரும் வாழ்வியல் திறனாகவும் இருக்கின்றது வாசிப்பின் மீது எங்களுக்கு இயல்பான ஈர்ப்பும் பற்றும் பிடிப்பும் ஏற்படுகின்ற பொழுது வாசிப்பது அலுப்பு சலிப்பு ஏற்படாத ஒன்றாக மாறிவிடும்.

வாசிப்பவர்களோடு அடிக்கடி நாம் தொடர்பு கொள்ள வேண்டும்.

நூல்களோடு நூலாசிரியர்களோடு தொடர்பு கொள்ள வேண்டும்.

நூல்கள் குறித்த விமர்சனங்களோடு நூலாசிரியர்களது பார்வைகளோடு நூல் வெளியீடுகளோடு எமக்கு தொடர்பு ஏற்படுகின்ற பொழுது தான் பல்வேறு புதிய நூல்கள் குறித்த பார்வையும் ஆர்வமும் நிரம்பிவிடும்.

புத்தகங்களைப்பரஸ்பரம் பகிர்ந்து கொள்கின்றவர்களோடு உறவுகளைப் பேண வேண்டும். இணையத்தளத்தில் புதிய நூல்கள் குறித்த பதிவுகளை ஆர்வத்துடன் வாசிக்க வேண்டும்.

புத்தக கலந்துரையாடல்களில் பங்கேற்க வேண்டும்.

வாசிப்பு ஒரு வணக்கமாக இருப்பதால் தினமும் அதனை செய்து வர வேண்டும் என்ற உள்ளுணர்வும் எம்மை வாசிப்பின் பக்கம் தூண்டிக் கொண்டே இருக்கும். கூட்டாக குடும்பமாக இணைந்து வாசிக்கலாம்.



வாரத்தில் ஒரு நாளாவது குடும்பத்தோடு இணைந்து ஆளுக்கு ஐந்து நாள்கள் வீதம் வாசிப்பதும் பயன் தரும்.

வீட்டு நூலகங்கள் வாசிப்பை ஊக்குவிக்கும்.

வாசிக்கக் கூடிய மனிதர்களோடு எமது தொடர்புகளை அதிகரித்துக் கொள்வதால் சிந்தனைகள் மேம்படுவதோடு வாசிக்க வேண்டிய புத்தகங்கள் குறித்த பார்வையும் பதிவுகளும் அவதானங்களும் தேவைகளும் இயல்பாக எழும். புத்தகங்கள் குறித்து கலந்துரையாடவும் வாய்ப்பாக மாறும்.

வாசிப்பதற்கான நேரத்தை நாம் ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். வாசிக்கின்ற கால அளவுகளையும் நாம் எமக்கு ஏற்றாற்போல ஒழுங்குப் படுத்திக் கொள்ள வேண்டும். அதே போல வாசிப்பதற்காக தெரிவு செய்கின்ற நூல்கள் வாசிப்பதற்காக தெரிவு செய்கின்ற இடங்கள் வாசிப்பதற்காக தெரிவு செய்கின்ற நூலாசிரியர்கள் போன்றவை குறித்தும் நாம் மிகுந்த அவதானத்தோடு இருக்க வேண்டும்.

நாம் எமக்கு விரும்பிய துறைகளில் விரும்பிய நூலாசிரியர்களது புத்தகங்களை வாசிப்பது உத்வேகம் தரும். எமக்கு இருமொழிப்பரீட்சயம் இருப்பின் குறிப்பிட்ட நூல் அந்த இரு மொழிகளிலும் இருப்பின் இரண்டையும் தனியாக வெவ்வேறாக வாசிப்பது போலவே ஒன்றாக சமாந்தரமாக வாசிப்பதும் வித்தியாசமான அனுபவத்தைத்தரும். எந்தளவு தூரம் எம்மை அன்றாடம் நாம் ஒழுங்கமைக்கின்றோமோ அதற்கமைய நாம் வாசிப்பில் இன்பமனுபவிக்கலாம். எமக்கு வாசிப்பதற்கான நேரம் கிடைத்துக் கொண்டே இருக்கும். அது போல எமது அகமும் உள்ள மூளையும் வாசிப்பின்பால் எம்மை தூண்டிக்கொண்டே இருக்கும். அவை உள்ளிருந்தவாறு எமக்கு அதற்கான எச்சரிக்கையை கொடுத்துக் கொண்டே இருக்கும். வாய்ப்பை வழங்கும்.

எப்பொழுதும் எம்மிடம் வாசிப்பதற்கான ஒரு புத்தகம் இருப்பது போலவே வாசிப்பதற்கான ஒரு முறைமையும் நுட்பமும் ஒழுங்கும் இருக்க வேண்டும். திடீரென எமது அன்றாட நேரத்தில் நேரசூசியில் மாற்றங்கள் நிகழும் பொழுது வாசிக்க வாய்ப்பாக கிடைக்கின்ற பொழுது நாம் அதனைப் பயன்படுத்தலாம். அந்நேரம் வாசிக்கக் கூடியதாக இருக்கும். அதை எமக்கு புதுவித பரவசத்தை தருவதோடு புதுவித அனுபவத்தையும் தரக் கூடியதாக இருக்கும்.

வாசிப்பு எப்போதும் உண்மையில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்ட ஒரு கோர்வையாக சங்கிலித் தொடராக அமைகின்றது இயல்பாகவே நாம் ஒரு துறையில் வாசித்துக் கொண்டு செல்கின்ற பொழுது அல்லது ஒரு நூலாசிரியரின் பல்வேறு பட்ட துறை சார்ந்த நூல்களை வாசித்துக் கொண்டு செல்கின்ற பொழுது எமக்கு பல்வேறு துறைகளுடனும் பல்வேறு துறைகளோடு தொடர்பு பட்ட நூல்களோடும் நூலாசிரியர்களோடும் தொடர்புகள் இயல்பாகவே ஏற்பட்டு விடும். அது எமது வாசிப்பெல்லையை விசாலிக்க செய்வதுதோடு வாசிப்பின் பன் முக தளத்தையும் விசாலிக்கும். இதனால் வாசிப்பு பன்முக பரிமாணம் கொண்டதாக மேம்பட்டு நிற்கும்.

வாசிப்பு எப்போதும் வாழ்வளிக்கும். வசதியளிக்கும். மென்மேலும் எம்மை ஒழுங்கமைக்கும். வாசிக்க வேண்டும் என்ற உள்ளார்ந்த மனோ நிலையும் தயார்நிலையுமே இவற்றை ஒழுங்கமைக்கும்.

# காத்தான்குடி மீடியா போரத்தின் ஏற்பாட்டில் சுதந்திர தின நிகழ்வு





(எம்.ஐ.அப்துல் நஸார்)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 78 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் முகமாக சுதந்திர தின நிகழ்வு காத்தான்குடி மீடியா போரத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.நூர் தீன் தலைமையில் புதன்கிழமை (04) அல்-பஜ்ர் நலன்புரி அமைப்பினால் பள்ளி வாயல் வளாகத்தில் இடம்பெற்றது. காத்தான்குடி மீடியா போரத்தின் உறுப்பினர் ஊடகவியலாளர் மௌலவி என்.எம்.நௌபர் (பலாஹி) கிராஅத் ஓதி ஆரம்பித்த துடன் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வில் போரத்தின் ஆயுட்காலத் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் மௌலவி எஸ்.எம்.எம்.முஸ்தபா (பலாஹி) தேசியக் கொடியை ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து, தேசிய கீதம் ஒலிக்கவிடப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. போரத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.நூர் தீனின் உரையும், நாட்டின் நலனிற்காகவும் சமூகங்களிடையே நல்லிணக்கத் திற்காகவும் போரத்தின் உறுப்பினர் ஊடகவியலாளர் மௌலவி என்.எம்.நௌபர் (பலாஹி) விசேட துஆ பிரார் த்தனையும் நிகழ்த்தினார். இந் நிகழ்வில், போரத்தின் உறுப்பினர் ஊடகவியலாளர் எம்.என்.நுஸ்த் மற்றும் அல்-பஜ்ர் நலன்புரி அமைப்பின் உறுப்பினர் களும் கலந்து கொண்டிருந்தனர்.

# மக்களின் தேவைகளுக்கே முன்னுரிமையளித்து செயற்படுகிறோம்

**உக்குவலை பிரதேச செயலாளர்**

( உக்குவளை ஜெலீல்)

எமது உக்குவளை பிரதேச செயலகம் எப்போதும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் கரிசனை காட்டிவரும் இச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் 78 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகிறது. என்று உக்குவளை பிரதேச செயலாளர் பாரமி தென்னகோன் தெரிவித்தார்.

இலங்கையின் 78 வது சுதந்திர தினத்தையொட்டி இப் பிரதேச செயலாளர் இச்செயலகத்தின் ஆண் பெண் சக உத்தியோகத்தர்கள் அதிகாரிகள் கிராம உத்தியோகத்த ர்கள் பங்களிப்புடன் இச்சயலகத்தில் ஏற்பாடுசெய்த கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் எம் நாடு சுதந்திரமடைந்து இன்றுடன் எழுபத்தெட்டாவது வருடத்தை இன்று நாம் ஒன்றினைந்து கொண்டாடுகிறோம். இன்றைய தினம் நம் நாட்டில் பல இடங்களிலும் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டின் சுதந்திர தின விழா "இலங்கையைக்



கட்டியெழுப்புவோம்" எனும் கருப்பொருளில் கொண்டாடப்ப ட்டு வருவது குறிப்பிடத்தக்கது எனவே பிரதேச செயலகங்கள் போன்ற நிறுவனங்களும் இலங்கையைக் கட்டி யெழுப்புவதில் பங்கிருக்கிறது அந்தவகையில் பல்வேறு முக்கிய தேவைகள் நிமித்தம் தினம்தோறும் இச் செயலகத்தை நாடி வரும் அனைத்தின மக்களின் தேவைகளைக் கண்டறிந்து எமது செயலகம் நிறைவேற்றிவருகிறது இதற்காக எமது செயலக அந்தந்த பிரிவுகளின் ஊத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் மனமுவந்து சிறப்பாகப் பணியாற்றிவருகின்றனர். இது எமது கடமையாகும். எமது பணிகளனைத்தையும் சிறப்பாக்கிக் கொண்டு எதிர்வரும் எழுபத் தொன்பதாவது சுதந்திர தினத்தையும் நாம் ஒன்றினைந்து சிறப்பாகக் கொண்டாடுவோம். என்றார்.

இந்நிகழ்வில் இச் செயலக சமூக செயற்பாட்டு பிரிவைச் சேர்ந்த உபேக்சா நவரத்ன, அமாலி மெதகெதர ஆகியோரினைந்து தேசிய கீதத்தையும் நாட்டுப் பற்றுப் பாடலொன்றையும் பாடினர். நிகழ்வின் இறுதியில் இச்செயகத்தின் சுற்றுபுறங்கள் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

# ஷாதுலிய்யா கலீபாக்கள் ஒன்று கூடல்

( பீ. எம். முக்தார்)

ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னேற்றம், வளர்ச்சி, எதிர்கால திட்டங்கள் சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 11ஆம் திகதி புதன் கிழமை கலை 9 மணிக்கு சீனங் கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீட பாஸிய்யா மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கைக்கான கலீபதுல் குலபாவும், காலி அலிய்யா அரபுக் கல்லூரி பணிப்பாளருமான அல்ஹாஜ் மௌலவி முஹம்மத் ஸுஹூர் (பாரி) தலைமையில் நடைபெறவுள்ளது. நாட்டிலுள்ள கலீபாக்கள் அனைவரும் இதற்காக அழைக்கப்பட்டுள்ளனர். இந்த ஒன்று கூடலை பேருவலைக்கான கலீபதுஷ் ஷாதுலி அல்ஹாஜ் மௌலவி இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) ஏற்பாடு செய்துள்ளார். இதில் ஓர் அங்கமாக சீனங்கோட்டை பகுதியிலுள்ள ரயீஸ்/ல் முகத்தமீன்கள், முகத்தமூன்கள், இக்வான்களுடனான கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது.

# 1948ஆம் ஆண்டு சுதந்திரம்: புதிய தேசமாக உருவெடுத்த இலங்கை

**இல்ஹாம் மரைக்கார்**



1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி, காலனித்துவ அடிமைத்தனத் திலிருந்து விடுதலை பெற்று சுயாதீனமான ஒரு நாடாக இலங்கை உருவெடுத்தது.

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணத்தின் 78 ஆண்டுகளை நாம் இன்று பெருமையுடன் நினைவுகூருகிறோம் என்று அமேசான் கேம்பஸ் மற்றும் அமேசான் காலேஜ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் தெரிவித்துள்ளார் 78வது சுதந்திர தினம் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரம் என்பது வெறும் உரிமை மட்டுமல்ல் அது பொறுப்பு, ஒற்றுமை மற்றும் பரஸ்பர மரியாதையையும் நமக்கு நினைவூட்டும் ஒரு உயரிய பெறுமதியாகும்.

இந்நாளில், இன, மத, மொழி வேறுபாடுகளைத் தாண்டி சகோதரத் துவ உணர்வுடன் ஒன்றிணைந்து, அமைதி, நல்லிணக்கம், சமூக நீதி மற்றும்நிலையான அபிவிருத்தி ஆகிய இலக்குகளைக் கொண்டு நாட்டை முன்னேற்ற உறுதி எடுப்போம்.

கடந்த கால சவால்களை தைரியமாக எதிர்கொண்டு,எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு நம்பிக்கையும் வாய்ப்புகளும் நிறைந்தஒரு வளமான இலங்கையை உருவாக்குவது நம் அனைவரின் பொது பொறுப்பாகும் என்றும் தமது வாழ்த்துச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.





ஆசிரியை நசிரா வசூக் எழுதிய இரு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் தல்கஸ்பிடிய முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. நூலின் முதற் பிரதியை தொழில் அதிபர் கமால் தீன் நிகழ்வின் பிரதம அதிதி புரவலர் ஹாசிம் உமரிடமிருந்து பெற்றுக் கொள்வதனைப் படத்தில் காணலாம்

# புத்தளம் மன்னார் வீதியைத் திறக்காது இனவாதிகளுடன் இணைந்து அரசு செயற்படுகிறது

## றிஷாத் பதியுதீன் காட்டம்



மன்னார் -புத்தளம் பாதையை திறந்து மக்கள் பாவனைக்கு விடுவோம் என தேர்தல் வாக்குறுதி வழங்கிய ஜனாதிபதி அனுர குமாரவின் அரசு, 15 வருடங்களுக்கு முன் அப் பாதைக்கு எதிராக, வழக்கு தாக்கல் செய்த இனவாத தரப்புடன் இணைந்து செயற்படுவது கண்டிக்ககூடியவது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்,

05ஆம் திகதி பாராளுமன்றில் ஆற்றிய உரையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் அங்கு உரையாற்றும் போது,

”மன்னார் புத்தளம் பாதையை பாதையை திறந்து தருவோம் என்று சொல்லி விட்டு இன்று, நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்த இனவாத தரப்புடன் இணைந்து அவர்களின் அமைச்சின் திணைக்களங்கள் கூறுவது வேடிக்கையானது. இன்று நான் இல்லாத வேளையிலே, அமைச்சர் விமல் ரத்நாயக் அவர்கள், ஒரு பாராளுமன்ற உறுப்பினருடைய கேள்விக்கு, பதிலளிக்கின்ற பொழுது, அவருடைய பதில், ஒரு நியாயமான-தாக, எனக்கு தெரியவில்லை.

விமல் ரத்நாயக்க அவர்களின் மீது ஒரு பெரிய நல்லெண்ணம் கொண்டவனாக நான் இன்று வரை இருந்தேன். ஆனால், மன்னார் புத்தளம் பாதை சம்பந்தமாக, அவருடைய கருத்து, ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. நூறு வருடம் பழமை வாய்ந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான, டீ(பீ) வகையான பாதையே மன்னார்-புத்தளம் பாதை ஆகும்.

நான் அமைச்சராக இருந்த பொழுது, அந்த பாதையை, மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தேன். அதற்கு முன்னர் நூறு (100) வருடங்களுக்கு முன்னால் அந்த பாதை, வீதி அபிவிருத்தி அதிகார சபை பாதையாக இருந்த பாதை, எங்களை எல்லாம் அன்று அந்த மண்ணிலிருந்து, பயங்கரவாதம் வெளியேற்றிய பொழுது, அந்தப் பாதையும் மூடப்பட்டு, வாழ்ந்த மக்கள் எல்லாம் விரட்டி அடிக்கப் பட்டதனால், அந்தப் பகுதியில், யாரும் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இரண்டாயிரத்தி ஒன்பதாம் ஆண்டு, சமாதானம் வந்த பிறகுதான், சொந்த ஊருக்கு, அந்த மக்கள், குறிப்பாக மறிச்சுக்கட்டி, காரடிக்குழி, பாலக்குழி, பெரியமாடு, முள்ளிக்குளம் மக்கள் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் மீள் குடியேறச்சென்றார்கள். அவ்வாறு செல்லுகின்ற பொழுது, பாரம்பரியமாக மக்கள் வாழ்ந்த பெரியமடு, மரிச்சுக் கட்டு, பாலக்கூலி, கரடிக்குழி, முள்ளிக்குளம், கொண்டச்சி, அளக்கட்டு உள்ளிட்ட சில பகுதிகள் இவ்வாறு வன வள திணைக்களத்திற்கு கீழ் ரெண்டாயிரத்தி பனிரெண்டாம் ஆண்டு, அந்த மக்களுக்கே தெரியாமல் அன்றிருந்த அரசாங்கம் இரகசியமாக வர்த்தமானி அறிவித்தல் செய்து கையகப்படுத்தினார்கள்.

இதற்கு எதிராக, அன்று நான் ஆளும் கட்சியில் இருந்தாலும் இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தொடர் முயற்சியாக போராடிக் கொண்டு எதிர்த்து பல போராட்டங்களை நியாயபூர்வமாக நாங்கள் செய்த பொழுது இந்த நாட்டில் இருந்த மதவாதம் குறிப்பாக, பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மதகுருமார் ஒரு சிலர் மன்னாரோடு எந்த சம்பந்தமும் இல்லாதவர்கள் மன்னாருக்குள்ளே வந்து ஆர்ப்பாட்டங்களை செய்து என்னை ”ஒரு காடுகளை அழிக்கின்ற” ஒருவராக காட்டுகின்ற, ஒரு மோசமான ஒரு இனவாத செயலைச் செய்தார்கள்.

எந்த ஊடகத்தை எடுத்தாலும் எனக்கு எதிராக அந்த மக்களுடைய குடியேற்றத்திற்கு எதிராக ஒரு பெரிய அநியாயமாக அன்று பேசப்பட்ட ஒரு காலமாக இருந்தது. அதையெல்லாம் தாண்டி அம்மக்களை நான் குடியேற்றினேன். அவ்வாறு இருக்கின்ற பொழுது இந்த மன்னார்-புத்தளம் பாதையை மூடுமாறு மேல் மாகாணத்தில் இருக்கின்ற, அந்த பாதைக்கு, சம்பந்தமில்லாத ஒரு சில சிங்கள மக்கள் நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அன்று வழக்கு போடுகின்ற பொழுது நானும் அதில் நான்காவது குற்றவாளியாக பெயரிடப்பட்டேன். அதுபோல் வனவள திணைக்களத்திற்கும், அன்று இருந்த முன்னாள் அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ, சேர்த்து வழக்குதாக்கல் செய்தனர்.

இதன் போது அன்றைய காலம் தொட்டு அனுரவுக்கு முன்னர் இருந்த மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால ஸ்ரீசேனா , கோட்டாபாய ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அனைத்து ஆட்சியாளர்களின் அமைச்சின் திணைக்களங்கள் மக்களுக்கு சார்பாகவே இருந்தனர் குறிப்பாக வனவளத்திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் , வீதி அபிவிருத்தி திணைக்களம் மக்களுக்காக அப்பாதையை திறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலலையே இருந்தனர். ஆனால் இன்று இருக்கின்ற ஜனாதிபதி அனுரகுமார திஸ்ஸநாயக்கவின் ஆட்சியிலுள்ள அமைச்சரின் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியோர் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளனர்,

யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்கும் இடையிலே, இருக்க, வருகின்ற பொழுது, 100 கி.மீ குறைவு, மன்னாரிலே இருந்து, புத்தளத்துக்கு வருகின்ற பொழுது, 100 கி.மீ குறைவு. ஜனாதிபதியாகியதும் இந்த பாதையை திறப்பதாக தேர்தல் வாக்குறுதியில் கூறிய அனுரகுமார திஸ்ஸநாயக்க மீது, இனவாதம் இல்லாத ஓர் அரசாங்கம் என்றும், முஸ்லிம் சமூகத்தினர் ஜனாதிபதி அனுர மீது நல்லெண்ணம் கொண்டிருந்தோம். நீங்கள் செய்யும் நல்ல விடயங்களுக்கு நாம் ஆதரவுகளை வழங்கி இருந்தோம், ஆனால் அப்படிப்பட்ட இந்த அரசாங்கம் இந்த பாதையை நிரந்தரமாக மூடுவதற்கான துரோகத்தை செய்கின்றது என்றால் அதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்கின்ற பொருட்களை கொழும்புக்கு கொண்டு வருவதன் மூலம் எவ்வளவு பொருளாதாரம் மிச்சம் என்று சிந்தியுங்கள். நூறு கிலோமீட்டர் குறைகின்ற பொழுது, இநத நாட்டுக்கு வருகின்ற சுற்றுலா பயணிகள், அந்த பிரதேசத்துக்கு செல்லுகின்ற பொழுது, அந்த பிரதேசம் முன்னேறும். அதேபோல, நூறு கிலோமீட்டர் கூடுதலாக செல்லுகின்ற பொழுது, எவ்வளவு சுற்றாடல் மாசடையும் என்று சிந்தியுங்கள்.

78 வது இலங்கையின் சுதந்திரத்தினை அரசு கொண்டாடிய போது வடக்கிலும்,கிழக்கிலும் வாழும் மக்கள் இன்றைய தினத்தை கறிநாளாக கொண்டியதுடன்,தமது எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தினர்.ஆனால் நாங்கள் உங்களிடம் நாட்டை பிரித்து கொடுங்கள் என்று கேட்கவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

எனவே, தயவு செய்து விலங்குகளை பாதுகாக்கிறோம் என்று மக்களை மக்களை கஷ்டப்படுத்துகின்ற ஒரு முடிவை இந்த அரசாங்கம் எடுக்கக் கூடாது. இது தொடர்பாக அவசரமாக பொறுப்பான அமைச்சர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும், வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஓர் மேசையில் உட்கார்ந்து பேசுங்கள் தீர்வைப் பெற்றுத்தாருங்கள்.

ஜனாதிபதி அவர்கள், புத்தளத்துக்கு சென்ற பொழுது மன்னார் புத்தளம் பாதையில் ஒரு பெரிய அணைக்கட்டை கட்டுவதற்கு 600 மில்லியன் தருவதாக முடிவெடுத்து வரலாற்று துரோகத்தை செய்துவிடாதீர்கள்.

அந்த அணைக்கட்டு திட்டத்தை விட இந்த வீதி முக்கியம் அதை திறந்து மக்கள் பாவனைக்கு கையளியுங்கள், இல்லையெனின் நாட்டிற்கு அது பெரும் பாதிக்கப்பாக அமையும்.” என அங்கு கருத்து தெரிவித்தார்.

---

# Makeezah Mahal

## சமூக சேவை நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஐந்து எழுத்தாளர்கள் இணைந்து எழுதிய நான்கு நூல்கள் வெளியீடு

**பயாஸா பாஸில்**




கடந்த ஞாயிற்றுக் கிழமை (01) பாணந்துறை, தொட்டவத்தையில் உள்ள Makeezah Mahal மண்டபத்தில் அந்த நிறுவனத்தின் முதல்வர் திருமதி ஷமீலா மிஸ்வர் தலைமையில் ஐந்து எழுத்தாளர்கள் இணைந்து எழுதிய 4 நூல்கள் வெளியீடு செய்து வைக்கப்பட்டன.

பல்வேறு துறை சார்ந்தவர்களின் படைப்புக்கள் மக்கள் பார்வைக்குக் கொண்டு வரப்பட்ட இந்நேர்வில், எழுத்தாளர் நபீல் அபாபீல் எழுதிய அவரது 38-ஆவது நூலான “ஆரோக்கியமான குழந்தை வளர்ப்பு” மற்றும் பல்கலைக்கழகத் தோழிகளின் நினைவுகளையும் லட்சியப் பயணத்தையும் விவரிக்கும் “கனவுகள் வெல்லட்டும்” ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன. அத்துடன் பெண்மையின் சிறப்புகளை மகள், தாய், மனைவி மற்றும் கற்பிப்பவள் எனப் பல்வேறு கோணங்களில் விளக்கும் “பெண் என்பவள்...” எனும் கூட்டுப் படைப்பும், “பெண்மையின் அற்புத உலகு” என்ற நூலும் அறிமுகமானது. இதில் சிபானியா பௌசுல், இன்ஷிராஹ் இப்ஹாம், பயாஸா பாஸில் மற்றும் மௌலவிய்யா றீமா பஹாவுத்தீன் ஆகியோர் பங்களித்துள்ளனர்.

மேலும், மௌலவிய்யா றீமா பஹாவுத்தீன் எழுதிய “சுவனத்தின் சாவி” என்ற நூலும் இவ்விழாவில் சிறப்பிடம் பெற்றது.

கல்வி மற்றும் ஊடகத்துறையைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்ட இவ்விழாவில், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ.வு. முஹம்மது ஜனோபர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு தலைமை உரை ஆற்றினார்.

இலங்கை முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவர் அஷ்-ஷைக் ஜெம்ஸீத் அஸீஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதுடன், மகீஸா மஹால் நிறுவனத்தின் ஆசிரியையும் எழுத்தாளருமான றீமா பஹாவுத்தீன் வரவேற்பு மற்றும் தலைமை உரையினை நிகழ்த்தினார்.

நிகழ்வின் நன்றியுரையினை எழுத்தாளரும் ஆசிரியையுமான சிபானியா பௌசுல் வழங்கினார். நபீல் அபாபீல், இன்ஷிராஹ் இப்ஹாம் மற்றும் பயாஸா பாஸில் ஆகியோரால் நூலாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு, இத்தகைய வெளியீடுகள் ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவதிலும் பெண் கல்வியை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் என விழாவில் சுட்டிக்காட்டப்பட்டது.


















**இந்நூல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 077 9930356 அல்லது 076 793 2677 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

**அல் அஸ்லாப் நினைவுப் பேருரைகள் தொடர் 6**

# அனைத்து மக்களாலும் ஆழமாக நேசிக்கப்பட்ட ஏ.ஸீ.எஸ்.ஹமீத்

**அப்துல் காதர் சாஹுல் ஹமீத் - ஏ.ஸி.எஸ். ஹமீத்**

ஏ.ஸி.எஸ். ஹமீத் என்ற பெயரில் நன்கு அறியப்பட்ட, காலஞ்சென்ற அமைச்சர் அப்துல் காதர் சாஹுல் ஹமீத் அவர்கள் தனது மக்களுக்கு ஆற்றிய சேவை காரணமாக நன்கறியப்பட்டவர். இனவாத அரசியலில் வளம் பெறும் ,ன்றைய அரசியல்வாதிகள் மத்தியில் அவர் ,ன நல்லிணக்கத்தின் சின்னமாக விளங்கி அனைத்து சமூகங்களாலும் நேசிக்கப்படுகின்றார்.

1960 மார்ச்சில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியதன் மூலம் அவர் தேசிய அரசியல் களத்தில் பிரவேசித்தார். அன்று தொடக்கம் எட்டு தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றியீட்டி தொடர்ச்சியாக 39 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார். இது ,ந்நாட்டின் பாராளுமன்ற வரலாற்றில் தொடர்ச்சியான ஒரு நீண்ட கால சாதனை.

ஹமீத், மத்திய மாகாணத்திலுள்ள – பிந்திய காலப்பகுதியில் ஹரிஸ்பத்துவ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட – அக்குறணை தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். அத்தொகுதியில் முஸ்லிம் சனத்தொகை 14 வீதமாகவும் ஏனைய 86 வீதமும் சிங்களவர்களாகவும் இருந்தனர். 134 கிராமங்களை உள்ளக்கிய அத்தொகுதியில் பல சிங்கள வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையிலும் அதிக சிங்களவர்கள் ஹமீதுக்கே வாக்களித்தனர்.

பிந்திய காலப்பகுதியில் தங்களது சொந்த அரசியல் கட்சிகளை ஸ்தாபித்து தற்போதைய கவலைக்கிடமான நிலைமைக்கு வழிகோலிய முஸ்லிம் அரசியல்வாதிகள் மத்தியில் இது தெளிவான ஓர் உதாரணமாக அமைகிறது.

1950களில், பயிற்றப்பட்ட முஸ்லிம் ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவியது. 1955ல் அவர்ஃ மத்திய மாகாண முஸ்லிம்களின் தேவைகளைக் கவனிக்கும் நோக்கில், கற்றவர்களையும் வர்த்தகர்களையும் உள்ளடக்கியதாக 'மத்திய இலங்கை முஸ்லிம் அவை" (CCMA) என்ற அமைப்பை ஸ்தாபித்தார். அவ்வமைப்பின் தலைவராக அவரே தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்வமைப்பின் பிரதிநிதிகள் குழு ஒன்று ஹமீத் அவர்களின் தலைமையில், எஸ்.டபிள்யூ.ஆர்.டி.



பண்டாரநாயக்க அவர்களின் அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்த கலாநிதி டபிள்யூ. தஹநாயக்க அவர்களைச் சந்தித்து, மத்திய இலங்கை முஸ்லிம்களுக்காக 39 கோரிக்கைகளை முன்வைத்தது. அவற்றில் 19 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

அவற்றில் ,ரு பிரதான கோரிக்கைகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். ஒன்று, 50 வீதத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் முஸ்லிம் வித்தியாலயங்களாகப் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதாகும். ஏனெனில், இந்தப் பாடசாலைகள் முன்னர் தமிழ் வித்தியாலயங்கள் என அழைக்கப்பட்டு வந்தன. இரண்டாவது கோரிக்கை, மத்திய மாகாணத்தில் ஒரு முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அமைக்கப்பட வேண்டும் என்பதாகும். ஹீரஸகலயில் பயிற்சிக் கலாசாலை அமைக்கப்பட்டதன் மூலம் இந்தக் கோரிக்கையும் நிறைவேறியது. அதுவரை காலமும் மத்திய மாகாண முஸ்லிம் ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சிக்காக தெற்கில் அல்லது வட கிழக்கிலிருந்த பயிற்சிக் கலாசாலைகளுக்கே செல்ல வேண்டியிருந்தது.

கலாநிதி தஹநாயக்க அவர்கள் முஸ்லிம் கல்வி மேம்பாட்டுக்கு ஆற்றிய பாரிய சேவை காரணமாக அவர் முஸ்லிம் கல்வியின் தந்தை என பல சந்தர்ப்பங்களில் வர்ணிக்கப்பட்டமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

1963ம் ஆண்டின் 11ம் இலக்க நிதிச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தம் இன்னொரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்தச் சட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் தங்களது பிரஜா உரிமையை நிரூபிக்காதவிடத்து, நிலங்களை வாங்கும் அல்லது விற்கும் உரிமை பறிக்கப்பட்டிருந்தது. ,தன் விளைவாக ஆயிரக்கணக்கான காணி உறுதிகள் நாடெங்கிலுமுள்ள காணிப் பதிவகங்களில் தேங்கிக் கிடந்தன.

இந்தப் பிரச்சினை கண்டி மாவட்ட முஸ்லிம்களுக்கு இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ்களில் ஷகே; பெயர்களைக் கொண்டிருந்தனர். ஆனால் இந்தப் பிரச்சினை நாட்டின் ஏனைய பாகங்களில் வசித்த முஸ்லிம்களால் வெகுவாக உணரப்பட்டது. பரிதாபகரமான இந்தப் பிரச்சினையை உணர்ந்த ஹமீத், ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவிடமும் அமைச்சரவையிலும் இப் பிரச்சினையை முன்வைத்தார். பின்னர் இச் சட்டம் திருத்தப்பட்டதன் காரணமாக, நாட்டின் ஏனைய சமூகத்தவர்களைப் போன்றே, தங்களது பிரஜா உரிமையை நிரூபிக்காமல் நிலங்களை வாங்கவும் விற்கவும் முஸ்லிம்கள் உரிமை பெற்றனர்.

தனது சமூகம் சார்பாகவும் நாட்டுக்காகவும் செயற்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் ஹமீத், தான் உரையாற்றும் சபையில் ஒழுங்கையும் கண்ணியத்தையும் பேணிவந்தார்.



1977ல் ஐ.தே.கட்சி அதிகாரத்துக்கு வந்தபோது அவர் அமைச்சரவையில் இடம்பெற்று நாட்டின் முதலாவது வெளிநாட்டமைச்சராகப் பதவியேற்றார். சுதந்திரம் பெற்றதிலிருந்து பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டலுவல்கள் என்பன என்பன அரசாங்கத் தலைவரின் பொறுப்பிலேயே இருந்துவந்தன.

1977-1987 வரையிலான காலப்பகுதியில், தனது தொகுதி மக்களின் நலன்களைப் பேணிய அதேவேளை, அணிசாரா நாடுகளின் அமைச்சரவை மாநாட்டின் தலைவராகவும் அவர் பதவி வகித்தார்.

அரசியலமைப்புச் சபை விவாதங்களின்போது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை தான் நிராகரிக்க மூன்று பிரதான காரணங்களை எடுத்துக்காட்டினார். அம் முறைமை நிர்வாகத் தலைவருக்கு மிதமிஞ்சிய அதிகாரத்தை வழங்குகின்றது என அவர் வாதித்தார்.

அவரது கருத்து எவ்வளவு தூரநோக்குடையது என்பது பிற்காலத்தில் வெகுவாக உணரப்பட்டது. மத்திய கிழக்கில் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புச் சந்தையை திறந்துவைத்தமை, வெளிநாட்டமைச்சர் என்ற வகையில் ஹமீத் செய்த பிரதான அரும்பணியாகும். வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்ஸில் அங்கத்துவ நாடுகளான சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், ஓமான். கட்டார். லிபியா. ஐக்கிய அறபு எமிரேட்ஸ் உட்பட சிங்கப்பூா. மலேஷியா. தென் கொரியா போன்ற நாடுகளிலும் தூதரகங்களைத் திறந்துவைக்கும் பொறுப்பை அவர் ஏற்றிருந்தார். ,ந்தத் தூதரகங்கள் காரணமாக பிற்காலத்தில் லட்சக்கணக்கான இலங்கையர் அந்நாடுகளில் தொழில்புரியும் வாய்ப்புக் கிட்டியது.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசாங்கத்துக்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் ,டையிலான பேச்சுவார்த்தைகளில் ஹமீத் பிரதான பங்களிப்புச் செய்தார். அதன் காரணமாக அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதிகாரப் பரவலாக்கம் செய்யும் வகையில் மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

ஹமீத் அணிசாரா அமைப்பின் அமைச்சரவை மாநாட்டின் தலைவராகவும் 1977-1979 காலப்பகுதியில் பணியாற்றினார். புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டுக்கு ஒத்துழைப்புத் தேடி அவர் ஆசியாவின் பல்வேறு நாடுகளுக்கும் விஜயம் செய்தார். மேலும் அவர் ஐ.நா. ஆயுதப் பரிகரண சபையின் ஆலோசனைக் குழுவிலும் பத்தாண்டுகள் பணியாற்றினார். அவர் சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பின் உறுதிமிக்க ஆதரவாளராக விளங்கினார்.

பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தெற்காசிய நாடுகளுக்கிடையிலான பரஸ்பர புரிதலை மேம்படுத்த வேண்டும் என்பதில் அவர் அதிக கரிசனை காட்டினார். தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக் கூட்டமைப்பைத் (SAARC) தோற்றுவிப்பதில் அவர் ஆற்றிய பங்கு மகத்தானது.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக் கூட்டமைப்பு 1985 டிசம்பர் 8ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அமைப்பு ஆப்கானிஸ்தான், பங்களாதேக்ஷ். பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய எட்டு நாடுகளை உள்ளடக்கியது. இவ்வமைப்பின் செயலகம் காத்மண்டுவில் 1987 ஜனவரி 17ல் அமைக்கப்பட்டது.

சுமார் பதினைந்து ஆண்டுகளாக தான் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றிய அந்த ஒப்புவமையற்ற, நீண்டகாலப் பிரிவில் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவர் தலைமை தாங்கிச் செயல்பட்டார். அந்தப் பதினைந்தாண்டுகளிலும் இலங்கையின் நீண்டகால ஆயுத மோதலுக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளில் கீழ்வரும் மூன்று பிரதான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைகளில் அவர் ஈடுபட்டார்.

* 1987ல் மேற்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தம்

* 1989,90களிலான பிரேமதாச – விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை

* அவர் உப தலைவராகச் செயற்பட்ட 1990-1992 அனைத்துக் கட்சி மாநாடு

என்பனவே அவை.

ஜனாதிபதி பிரேமதாஸவின் காலப்பகுதியில் அவர் உயர்கல்வி, விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சராகவும் பின்னர் நீதி அமைச்சராகவும் பதவி வகித்தார்.

உயர்கல்வி அமைச்சராகவும் நீதி அமைச்சராகவும் பதவி வகித்த காலப்பகுதியில் தனது வேலைப் பளுவுக்கு மத்தியிலும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமை தாங்கி அவர் சிறப்பாகச் செயல்பட்டார்.

எப்போதும் புன்னகையுடன் காணப்பட்ட அவர், மிகப் பதற்றமான சூழ்நிலைகளிலும் பதற்றத்தைத் தணிக்கும் திறன் பெற்றிருந்தார். நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கத்துடன் செயற்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் அரசு சார்பில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் விரும்பத்தகாத நிலைமைகளையும் அபாரத் துணிச்சலுடன் அணுகி, தனது ராஜதந்திர ஆற்றல் மூலம் திறம்படக் கையாண்டார்.

ஹமீத் அவர்களை ஓர் இடைநிலையாளராகப் பயன்படுத்தியே காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள் லண்டனில் இருந்த விடுதலைப்புலிகளின் பேச்சாளர் அன்டன் பாலசிங்கத்தை தொடர்புகொள்ள முடிந்தது. வன்னியிலிருந்து தமது தலைமைத்துவம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான பிரேமதாஸ அவர்களது அழைப்பைப் பரிசீலனை செய்து



கொண்டிருப்பதாகவும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் உரிய முடிவு எடுக்கப்படும் என்றும் பாலசிங்கம் அறிவித்தார். இந்தியப் படைகளை வெளியேற்றுவது பற்றி ஜனாதிபதி ஒரு பகிரங்க உறுதிமொழியை வழங்கினால் அதனை விடுதலைப்புலிகள் வரவேற்பர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். 1989 ஏப்ரல் 12ம் திகதி தமிழ்-சிங்களப் புத்தாண்டு சமயத்தில் இலங்கை ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப் படுவதாக திரு. பிரேமதாஸ ஒருதலைப்பட்சமாக பிரகடனம் செய்தார். இந்திய அமைதிப்படையும் அதற்கேற்ப செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதன்படி, விடுதலைப்புலிகளின் தூதுகோஷ்டியுடனான நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபோது அரச தரப்பிலான பிரதம பேச்சுவார்த்தையாளராக ஹமீத் நியமிக்கப்பட்டார். காலத்துக்குக் காலம் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்ற அனைத்து இலங்கை அமைச்சர்களும் திரு. ஹமீத் அவர்களது தலைமைத்துவத்தை அங்கீகரித்தனர்.

பாலசிங்கம்ஃ அவரது பாரியார் அடேல், பரமுமூர்த்தி, யோகரட்னம் (யோகி) ஆகியோரைக் கொண்ட விடுதலைப்புலிகளின் தூதுகோஷ்டி ஹில்டன் ஹோட்டலை வந்தடைந்த சிறிது நேரத்தில், மறுதினம், மே 4ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களுடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

முதல் சந்திப்பில் இரு தரப்பினரும் மகிழ்ச்சியடைந்தனர். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வசதியாக தான் அவர்களை தொடர்ச்சியாக சந்திக்கவுள்ளதாக திரு. பிரேமதாஸ உறுதியளித்தார். மேலும், பேச்சுவார்த்தைகளில் ஏதேனும் இடையூறுகள் தோன்றுமிடத்து, தன்னை நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அவர் திரு. பாலசிங்கத்திடம் கூறினார்.

அமைச்சரவைக் குழுவுடன் பல சுற்றுக்கள் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. அதேபோல் ஜனாதிபதியுடன் பிரத்தியேகமாகவும் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. 1989 மே 4ம் திகதிக்கும் மே 30ம் திகதிக்குமிடையில் மொத்தமாக ஒன்பது அமர்வுகள் இடம்பெற்றன. இலங்கை மண்ணில் இந்தியப் படையின் வருகையை ஜனாதிபதி பிரேமதாஸ எதிர்த்ததனால, விடுதலைப்புலிகளின் தூதுகோக்ஷ்டியின் கோரிக்கைகளை அவர்கள் எதிர்க்க முற்படவில்லை.

இந்தியப் படை இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னர் விடுதலைப்புலிகள் பிரதான அரசியல் நீரோட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி ஆர்வமாக உள்ளார் என திரு. ஹமீத் விடுதலைப்புலிகளின் தூதுகோக்ஷ்டியிடம் தெரிவித்தார். விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தேர்தல்களில் பங்குபற்றுவதாக வாக்குறுதி அளித்தால் வடகிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிடவும் ஜனாதிபதி தயாராக இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

விடுதலைப்புலிகளின் தூதுகோக்ஷ்டியினர், தாங்கள் எவ்வித உறுதிமொழிகளையும் அளிப்பதற்கு முன்னர் தாம் தமது தலைவரைக் கலந்தாலோசிக்க வேண்டும் எனக் கூறி விடயத்தைத் தவிர்த்தனர். முதலாம் சுற்றுவட்டப் பேச்சுக்களின் ,றுதி அமர்வின்போது, மேற்படி அமர்வுகள் பிரச்சினைகள் பற்றிய மேலான புரிந்துணர்வுக்கும் அவை பற்றிய முக்கியத்துவத்தை உணர்த்துவதற்குமான வாயிலைத் திறந்துவிட்டுள்ளதாகவும் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கு ஓர் உறுதியான அடித்தளத்தை அமைத்துள்ளதாகவும் இரு தரப்பினரும் ஒத்துக்கொண்டனர்.

இந்த விடயத்தில் ஹமீத் அவர்கள் வகித்த பாத்திரம் பற்றி, விடுதலைப்புலிகளின் பிரதம பேச்சாளர் அன்டன் பாலசிங்கத்தின் பாரியார் அடேல் பாலசிங்கம் எழுதிய 'The Will to Freedom" என்ற நூலில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் அவர் வகித்த பாத்திரம் பற்றிக் குறிப்பிடுகையில், சமாதானப் பேச்சுக்களுக்காக ஹமீத் பொறுமையுடன் செயலாற்றினார் எனக் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில், வெளிநாட்டு உறவுகளில் அவரது பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில், இலங்கை ஜயவர்தனபுர பல்கலைக்கழகமும் 1978ல் கொரியக் குடியரசின் ஹான்க் பல்கலைக்கழகமும் அவருக்கு கௌரவ கலாநிதி பட்டங்களை வழங்கிக் கௌரவித்தன.

அமைதியை நிலைநாட்டுவதில் அவரது பாத்திரம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் பிரபல சிவில் நிர்வாக அதிகாரியான பிரட்மன் வீரக்கோன் இவ்வாறு கூறுகிறார்:

இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதில் தனது தொடரான முயற்சிக்காக ஏ.ஸி.எஸ். ஹமீத் என்றென்றும் நினைவுகூரப்படுவார். இலங்கையின், தீர்வு காண்பதற்குக் கடினமான ஆயுத மோதலுக்குத் தீர்வு காணும் நோக்கில் 15 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மூன்று பிரதான முயற்சிகளில் அவர் பிரதான பாத்திரம் வகித்தார். 1987ல் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம், 1989-1990களிலான பிரேமதாஸ-விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகள் மற்றும் 1990-1992 காலப்பகுதியிலான – அவர் உப தலைவராகச் செயற்பட்ட – அனைத்துக் கட்சி மாநாடு என்பனவே அவை.

அவர் தனது இறுதிப் பொறுப்புக்களில் ஒன்றாக தனது கட்சி சார்பில் இனப்பிரச்சினைக்கான இரு தரப்புகளுக்கும் ஏற்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல்களை வழிநடாத்தியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. பண்பும் சிந்தனையும் பொருத்தமாக அமைந்திருந்ததால், நடுநிலையாளராகவும் சமாதானத்தை ஏற்படுத்துபவராகவும் செயலாற்ற அவர் சிறப்புத் தகுதி பெற்றிருந்தார்.;

தேர்தல் காலங்களில் அவர் ஒவ்வொரு கிராமமாகச் சென்று தனது வாக்காளர்களைச் சந்திக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில், அவர் ஒரு மூதாட்டியைச் சந்தித்தார். அவர் அந்த வயோதிபப் பெண்மணியிடம், 'ஆச்சி, இம்முறை நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள்?" என வினவினார். பார்வைக் குறைபாடு காரணமாக அப் பெண்மணியால் அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. உடனடியாக அந்த மூதாட்டி, 'அந்த ஷதம்பி;க்கு அல்லாமல் வேறு யாருக்குத்தான் வாக்களிப்பது...?" எனப் பதிலளித்தார். அதற்கு, 'ஆச்சி, அந்தத் தம்பி; நான்தான்" என்றார் ஹமீத்.

சிங்கள மக்கள் அவரது இனத்தையோ மதத்தையோ பார்க்காமல் எவ்வித தயக்கமுமின்றி அவரை ஆதரித்தமையை இந்த சம்பவம் காட்டுகின்றது. அவர் அவர்களுடன் இணைந்திருந்தார். ஹரிஸ்பத்துவ தொகுதியை அவர் பிரதிநிதித்துவப்படுத்திய காலப்பகுதியில் தொழில் வாய்ப்புப் பெற்றவர்களில் அதிகமானோர் சிங்களவர்களாகவே இருந்தார்கள்.

வெளிவிவகார அமைச்சராக அவருக்கிருந்த வேலைப்பளுவுக்கு மத்தியிலும், பல நூல்களை எழுதுவதற்கும் அவருக்கு நேரம் இருந்தது. அவற்றில் Spring Of Love And Mercy எனும் சன்மார்க்க நூலும் ஒன்று. அவர் எழுதிய ஏனைய நூல்களில், 'Foreign Policy Perspectives Of Sri Lanka', 'In Pursuit of Peace', 'The Owl And The Lotus' என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றில் 'The Owl And The Lotus' எனும் நூல் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஹமீத் 1999 செப்டெம்பர் 03ல் காலஞ்சென்றார். மரணிக்கும்போது அவரது வயது 71. அவரது நல்லடக்கத்தின்போது பல்லாயிரக்கணக்கானோர் அக்குறணையில் திரண்டனர்.

'திரு. ஹமீத் அவர்களின் பணி மிகவும் தேவைப்படும் அதிமுக்கியமானதும் தீர்மானமானதுமான ஒரு காலகட்டத்தில் நாடு அவரை இழந்துவிட்டது" என ஜனாதிபதி பிரேமதாஸ தான் வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவித்தார். அந்த மாலைப்பொழுதில் அனைத்துக் கட்சிகளினதும் உயர்மட்ட அரசியல் பிரமுகர்கள், ராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவரது நல்லடக்கத்திற்காக, அவரது சொந்த ஊரான அக்குறணையில் திரண்டிருந்தனர்.

'திரு. ஹமீத் பாராளுமன்றத்தில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவம் கொண்டவர். அவர் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் நாட்டு மக்களினதும் அன்பையும் மரியாதையையும் பெற்றிருந்தார். பாராளுமன்றத்தில் எப்போதும் உயர்தரத்திலான நடத்தையைப் பேணுவதற்காக முயன்ற தனித்துவமான உறுப்பினராக அவர் அடையாளப்படுத்தப்பட்டார். மேலும், சர்வதேச சமூகத்தின் பல்தரப்பட்ட பகுதியினரினதும் பாராட்டுக்குரியவராகத் திகழ்ந்தார்.

'அவர் அமைதிக்காகப் பாடுபட்டார். இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதில் அவர் முழுமூச்சாக ஈடுபட்டார். அண்மைய வருடங்களில், சமாதானத்தை அடைந்து கொள்வதற்கான முயற்சியாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்குத் தேவையான அரசியல் இணக்கத்தை அவர் வலுவாக ஆதரித்தார்..."

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் அப்போதைய எதிர்க்கட்சியான ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தேசிய மட்டத்தில் அவரது சேவையை மனமாரப் புகழ்ந்தனர். இரு பிரதான கட்சிகளையும் இணைத்துச் செயற்பட வைக்கும் பிரயத்தனத்தில் அவர் முக்கிய பங்காற்றிக் கொண்டிருக்கும் வேளையிலேயே அவரது மரணம் நிகழ்ந்தது.

ஹமீத் அவர்களின் மரணத்துக்குப் பின்னர், அவர் மறைந்து மூன்றாண்டு நிறைவையொட்டி தபால் திணைக்களத்தின் முத்திரை வெளியீட்டுப் பணியகம் 2002 செப்டெம்பரில் ஒரு ஞாபகார்த்த முத்திரையை வெளியிட்டது.

**தகவல்: சிரேஷ்ட ஊடகவியலாளர் லத்தீப் பாரூக்**



**தொகுப்பு ஹில்மி முஹம்மத்**




# 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ணம்

## முழுமையான அலசல் ரிப்போர்ட்





அரபாத் பஹர்தீன்

கனவான்களின் ஆட்டம் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் மற்றைய துறைகள் போன்று காலத்திற்குக் காலம் பரிணாம வளர்ச்சி பெற்று வந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக 6 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டிகளுடன் அறிமுகம் பெற்ற கிரிக்கெட் பின்னர் அதன் முடிவினை ஒரு நாளில் பெற்றுக் கொள்ள 60 ஓவர்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட்டை அறிமுகம் செய்தது.

பின்னர் 60 ஓவர்கள் 50 ஓவர்களாக மாற்றம் பெற்றன. இதன் மூலம் உலக கிரிக்கெட்டில் இன்னும் சில நாடுகள் தமது வரவை உறுதிப்படுத்தி கிரிக்கெட்டினை வளர்க்க ஆரம்பித்தன. இருப்பினும் ஒருநாள் கிரிக்கெட்டின் முடிவினை சுமார் 8 மணித்தியாலங்கள் பொறுத்திருந்து அறியவேண்டிய நிலையை இப்போதைய நவீன காலத்தில் ஏற்க முடியாத கிரிக்கெட் ரசிகர்கள் கிரிக்கெட் மீதான ஆர்வத்தை குறைத்துக் கொள்ளும் நிலையை அறிந்த சர்வதேச கிரிக்கெட் பேரவை போட்டி முடிவை மூன்றே மணித்தியாலங்களுக்குள் பெறக்கூடிய இருபதுக்கு இருபது கிரிக்கெட்டை அறிமுகம் செய்து வைத்தது.

இதனால் கிரிக்கெட் போட்டிகள் பெரும் பெரும் வல்லரசு நாடுகளுக்குள்ளும் ஊடுருவல் செய்ய எதிர்பார்த்ததை விட கிரிக்கெட் தன் பக்கம் ரசிகர்களை ஈர்த்துக் கொண்டது.


### முதல் இருபதுக்கு இருபது உலகக்கிண்ணம்

கிரிக்கெட்டின் போக்கை மாற்றியமைத்த இருபதுக்கு இருபது போட்டிகளின் முதல் உலக்கிண்ணப் போட்டி கடந்த 2007 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இடம்பெற்றுது. இதில் ஒவ்வொரு போட்டிகளும் கிரிக்கெட் ரசிகர்களுக்கு மிகப் பெரும் விருந்தினை வழங்கியிருந்தது.

அதிலும் குறிப்பாக முதல் இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் எதிரிகளாக நோக்கப்படும் இந்திய – பாகிஸ்தான் அணிகள் மோதியிருக்க, அப்போட்டி இன்றுவரை உலக கிரிக்கெட் ரசிகர்களால் மறக்கமுடியாத போட்டியாக பேசப்படும் அளவிற்கு மாறியிருந்தது. அம் முதல் இருபதுக்கு இருபது உலகக்கிண்ணத் தொடரின் முதல் சம்பியன் மகுடத்தை மகேந்திர சிங் டோனி தலைமையிலான இந்திய அணி தனதாக்கி வரலாறு படைத்தது.

### 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ணம் தொடர்பான முழுமையான அலசல்

இரு வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரின் 10ஆவது உலகக் கிண்ண தொடரை இம்முறை நடப்புச் சம்பியனான இந்தியாவும் இலங்கையும் இணைந்து




நடாத்துகின்றது. இம்முறை உலகக்கிண்ண தொடரில் முதல் முறையாக 20 அணிகள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் இந்தியா கடந்த 2016 ஆம் ஆண்டும், இலங்கை 2012 ஆம் ஆண்டிலும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடர்களை நடாத்தியிருக்க, இக் காலாண்டில் இவ் விரு அணிகளும்

இணைந்து 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரை நடாத்துகின்றது.

மேலும் இப்போட்டிகள் பெப்ரவரி 7ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி வரை இடம்பெறுவதுடன், மொத்தமாக 55 போட்டிகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### போட்டி இடம்பெறும் மைதானங்கள்

10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரை இந்திய மற்றும் இலங்கை அணிகள் இணைந்து நடாத்துவதனால் மொத்தமாக 8 மைதானங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. அதில் இந்தியாவில் 5 மைதானங்களிலும், இலங்கையில் 3 மைதானங்களிலும் பகல், பகலிரவு மற்றும் இரவு போட்டிகளாக இடம்பெறவுள்ளன.

இதில் இந்திய மைதானங்களைப் பொறுத்தமட்டில் உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமான அகமதாபாத்தின் நரேந்திர மோடி மைதானம், மும்பை வாங்கடே மைதானம், சென்னை சேப்பாக்கம் மதானம், கல்கத்தா ஈடன் கார்டன் மைதானம் மற்றும் டெல்லி மைதானம் ஆகிய 5 மைதானங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மேலும் போட்டிகளை நடாத்தும் இணை நாடான இலங்கையில் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானம், கண்டி பல்லேகல மைதானம் மற்றும் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானம் ஆகிய 3 மைதானங்களிலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானம் பகலிரவுப் போட்டிகளை நடாத்தும் மைதானமாக இதுவரை இருந்திருக்க வில்லை. இருப்பினும் உலகக்கிண்ண தொடரை நடாத்துவதற்காக பல மில்லியன் ஷரூபாய்கள் செலவில் ஆறு மின்கம்பங்கள் நிறுவப்பட்டு பகலிரவு போட்டிகளை நடாத்தும் நிலைக்கு இம் மைதானம் தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

மேலும் மைதானங்களின் தன்மையைப் பொறுத்தவரையில் இந்திய மைதானங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு மிகப் பெரும் சாதகத்தன்மையை கொண்ட மைதானங்களாலும். மேலும் சுழல்பந்து மற்றும் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சமமான அளவில் இம் மைதானங்களில் தமது ஆதிக்கத்தை செலுத்த முடியும். மாறாக இலங்கை மைதானங்கள் பெரும்பாலும் சுழல்பந்து வீச்சாளர்களுக்கு அதிகமான சாதகத்தன்மையை வழங்கும். அத்துடன் மெதுவான பிட்ச்களைக் கொண்ட மைதானங்கள் என்பதால் 180 இற்கும் அதிகமான ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள அணிகள் அதிகப் பிரயத்தனம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

### போட்டி அட்டவணை

இம்முறை இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் முதல் முறையாக 20 அணிகள் பங்கேற்றிருக்க முதல் லீக் சுற்றுக்காக ஒரு குழுவில் 5 அணிகள் வீதம் 4 குழுக்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு அணி மற்றைய 4 அணிகளுடன் தலா ஒரு முறை மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

#### குழு - ஏ

இந்தியா
நமீபியா
நெதர்லாந்து
பாகிஸ்தான்
அமெரிக்கா

#### குழு - பி

அவுஸ்திரேலியா
இலங்கை
ஓமான்
அயர்லாந்து
சிம்பாப்வே

#### குழு - சீ

இங்கிலாந்து
இத்தாலி
நேபாளம்
மேற்கிந்தியத் தீவுகள்
ஸ்கொட்லாந்து

#### குழு - டி

ஆப்கானிஸ்தான்
கனடா
நியூசிலாந்து
தென்னாப்பிரிக்கா
ஐக்கிய அரபு இராச்சியம்

இவ்வாறு குழு ஏ முதல் குழு டி வரை அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன.

### சுப்பர் 8 சுற்று

முதல் சுற்றான குழு நிலைப் போட்டிகள் முடிவுற்றதன் பின்னர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு இடங்களைப் பெற்றுக் கொள்ளும் அணிகள் “சுப்பர் 8” சுற்றுக்குள் நுழையும். இவ்வாறு “சுப்பர் 8” சுற்றில் இடம்பெற்ற அணிகள் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அதில் ஒரு அணி மற்றைய 3 அணிகளுடன் தலா ஒரு முறை மோதும் வகையில் “சுப்பர் 8” சுற்று அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

### அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி

“சுப்பர் 8” சுற்றின் முடிவில் இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் 4 அணிகள் அரையிறுதிப் போட்டிக்குள் நுழையும். பின்னர் குழு ஒன்றில் முதலிடம் பிடித்த அணியும், குழு இரண்டில் இரண்டாம் இடம் பிடித்த அணியும் முதல் அரையிறுதியில் மோதும்.

பின்னர் குழு ஒன்றில் இரண்டாம் இடம் பிடித்த அணியும் குழு இரண்டில் முதல் இடம் பிடித்த அணியும் 2ஆவது அரையிறுதியில் மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.


(தொடர் அடுத்த பக்கம்......)




























(விளையாட்டு .... முன்பக்க தொடர்)

பின்னர் 10ஆவது ஆடவர் இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரின் சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் அரையிறுதிப் போட்டிகளில் வெற்றி பெறும் அணிகள் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன. இத் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் தகுதி பெற்றால் அப் போட்டி இலங்கையின் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறும். மாறாக பாகிஸ்தான் தவிர்ந்த ஏனைய அணிகள் தகுதி பெற்றால் இறுதிப் போட்டி இந்தியாவின் அஹமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் இடம்பெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## கனவான்களின் ஆட்டத்திற்குள் காலூன்றிய அரசியல்

10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடர் பல எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்திச் சென்று கொண்டிருக்கின்றது. அந்த வகையில் கனவான்களின் ஆட்டம் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் போட்டிகளுக்குள் இப்போது ஒவ்வொரு நாடுகளின் அரசியல் தலையீடுகள் மிக மோசமாக காலூன்றியுள்ளன.
குறிப்பாக இந்திய அரசியலின் தாக்கம் எதிர்காலத்தில் கிரிக்கெட்டின் புனிதத்தை இல்லாமலாக்கலாம் என பல கிரிக்கெட் விற்பன்னர்கள் தமது கருத்துக்களில் குறிப்பிடுகின்றனர்.
அந்தவகையில் 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் தெற்காசிய நாடான பங்களாதேஷ் குழு – சீ இல் பெயரிடப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்திய மற்றும் பங்களாதேஷ் அரசுகளுக்கு இடையிலான உறவின் விரிசல் காரணமாக இவ்வருடம் இடம்பெறவுள்ள இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் ஏலம் எடுக்கப்பட்ட பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளரான முஷ்தபிசுர் ரஹ்மானை கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நீக்கியது. பின்னர் பங்களாதேஷ் அணி தம்க்கு பாதுகாப்பு அச்சுருத்தல் காரணமாக இந்தியாவில் போட்டிகளில் பங்கேற்க முடியாது என கூறியிருந்தது.
இதற்கு மாற்றமாக போட்டிகளை நடாத்தும் மற்றைய நாடான இலங்கையில் தமக்கான போட்டிகளை வைக்குமாறு கோரியிருக்க அதனை சர்வதேச கிரிக்கெட் பேரவை நிராகரிக்க, பங்களாதேஷ் அணி உலகக்கிண்ண தொடரிலிருந்து விலகிக் கொண்டது. இதனால் குழு சீ இற்கு தரப்படுத்தலில் அடுத்த இடத்திலிருந்த




ஸ்கொட்லாந்து அணிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.
மேலும் பாகிஸ்தான் அணி தமது ஆதரவை பங்களாதேஷ் அணிக்கு வழங்கி சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஒரு தலைபட்சமான முடிவை வன்மையாகக் கட்டித்ததுடன், முதலில் தாமும் உலகக்கிண்ண தொடரிலிருந்து விலகுவதா ? இல்லையா? என பரிசீலித்து வருவதாக அறிவித்திருந்தது. பின்னர் கடந்த 2ஆம் திகதி தமது நிலைப்பாட்டை அறிவித்திருந்தது. இதில் எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கையின் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ள




இந்தியாவுக்கு எதிரான குழு – ஏ இன் லீக் ஆட்டத்தில் தாம் பங்கேற்கப் போவதில்லை என அறிவித்தது.
இதனால் சுமார் 4500 கோடி இந்திய ஷரூபாய் நஷ்டம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும் உலகக் கிண்ண தொடரில் எந்த அணியும் போட்டிகளில் இருந்து விலக முடியாது என ஐசிசி கட்டாயமாகக் கூறியிருக்க, தமது முடிவில் உறுதியாக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் நேற்று அறிவித்திருந்தார்.
இவ்வாறு கனவான்களின் ஆட்டத்தை தன் பூரண கட்டுப்பாட்டில் வைத்து பணக்கார அரசியல் ஆட்டிப்படைப்பதுதான் கலவைக்கிடமாக உள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.




## பலமிக்க அணிகளில் தன்மைகள்

இந்தியா – நடப்புச் சம்பியனாக இப் 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரில் தடம் பதிக்கிறது.
இரு முறை சம்பியன் மகுடத்தை தனதாக்கிய அணி. மேலும் எந்தப் பதினொரு வீரர்களை ஆடும் அணிக்குள் உள்வாங்குவது என்கின்ற அளவிற்கு அனைத்து வீரர்களும் தரமான இளம் துடிப்பமிக்க வீரர்களைக் கொண்ட அணி. அத்துடன் அதிரடிக்குப் பஞ்சமில்லாத சகலதுறை வீரர்களை அதிகமாகக் கொண்ட அணி.இங்கிலாந்து
– நவீன அணுகுமுறையைக் கொண்ட அணியாகும். டெஸ்ட் போட்டிகளையே ரி20 போட்டிகள் போல் விளையாடும் அணி. இறுதியாக இலங்கையில் இடம்பெற்ற 3 போட்டிகளைக் கொண்ட ரி20 தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றிய நம்பிக்கை யுடன் களம்காணும் அணி. அத்துடன் சுழல்பந்து சகலதுறை வீரர்களை கொண்ட அணியாக மாறியுள்ளமையால் இந்தியா மற்றும் இலங்கை மைதானங்களில் தமது ஆதிக்கத்தை இவ் அணி அதிகமாகவே செலுத்தும்.
அவுஸ்திரேலியா – உலகக்கிண்ண தொடர் என்றால் இவர்களின் ஆட்டம் வேறாக இருக்கும். வேகப்பந்து வீச்சை தம் தாரக மந்திரமாகக் கொண்ட அணி. சுழல் பந்து வீச்சுக்கு தடுமாறும் இவ் அணியின் துடுப்பாட்டம் இறுதியாக பாகிஸ்தான் அணிக்கு எதிராக ரி20 தொடரை 3:0 என இழந்ததிலிருந்து நிரூபனமாகியிருக்கிறது. இருப்பினும் உலககிண்ண போட்டித் தொடர் என்பதால் இவ் அணி மிக எளிதில் எதிரணிகளை வெல்ல விடாது என்பது திண்ணம்.
பாகிஸ்தான் – எவராலும் எதிர்வு கூறவே முடியாத அணியாக அன்று தொட்டு இன்று வரை இருக்கும் அணி. ஆனால் இலங்கை மைதானங்களில் இவ் அணிக்கான போட்டிகள் இடம்பெறுவதனால் சுழல்பந்து வீச்சிக்கு சாதகமான காரணத்தாலும் இவ் அணியில் சுழல்பந்து சகலதுறை வீரர்கள் அதிகம் கொண்ட அணி என்பதாலும் இவ் உலகக்கிண்ணத்தில் இவர்களின் வகிபாவம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.
தென்னாபிரிக்கா – கடந்த உலகக் கிண்ண தொடரில் இறுதிப்போட்டியில் கிண்ணத்தை பறிகொடுத்த அணி. துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பில் சம நிலையை கொண்ட அணியாகும்.
ஆப்கானிஸ்தான் – இம்முறை அரையிறுதிக்கான வாய்ப்புக் கொண்ட அணிகளில் இவ் அணியையும் குறிப்பிடலாம். இந்திய மற்றும் இலங்கை மைதானத்தில் சுழல்பந்து வீச்சின் ஆதிக்கம் உள்ளமையே இவ் எதிர்வு கூறலுக்கு காரணமாகும்.

## இருபதுக்கு இருபது போட்டிகளில் முடிவை மாற்றும் தருணங்கள்

இருபதுக்கு இருபது போட்டிகளைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு பந்தும் போட்டிகளின் வெற்றி தோல்வியினை தீர்மானிக்கும் சக்தி கொண்டது. அதிலும் முதல் 6 ஓவர்களைக் கொண்ட “பவர் பிளே” எந்த அணி அதிக ஓட்டங்களைக் குவிக்குமோ அல்லது எந்த அணி ஓட்டங்களைக் குறைத்து விக்கெட்டுகளை வீழத்துமோ அந்த அணிக்கு வெற்றி வாய்ப்பு மிக அதிகம்.
அதேபோல் டெத் ஓவர் என வர்ணிக்கப் படும் (16 – 20) இறுதி 5 ஓவர்களில் எந்த அணி முன்னிலை பெறுமோ அவ்வணி வெற்றியை பெற வாய்ப்பு அதிகம்.
அத்துடன் சகலதுறை வீரர்களை அதிகமாகக் கொண்ட அணியும் வெற்றிக்கான வாய்ப்பை அதிகரிக்கும்.
மேலும் ஒவ்வொரு ஓவர்களும், ஒவ்வொரு பிடியெடுப்புக்களும், ஒவ்வொரு சிறப்பான களத்தடுப்புக்களும் ஒவ்வொரு போட்டியின் வெற்றியை தீர்மானிக்கும் சக்தி படைத்தவைகள் ஆகும்.

## 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ண தொடரும் இலங்கை அணியும்

இவ் உலககிண்ண தொடரில் இலங்கை அணி குழு – பி இல் இடம்பிடித்துள்ளது. இக்



குழுவில் பலமிக்க அணிகளான அவுஸ்திரேலியா, அயர்லாந்து, சிம்பாப்வே மற்றும் ஓமான் அணிகள் அங்கம் வகிக்கின்றன.
இக் குழு மிகவும் சவால் மிக்க குழுவாக நோக்கப்படுகின்றது. இலங்கை அணி தமது 4 லீக் ஆட்டங்களையும் வெற்றி கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் களம் காணவேண்டியுள்ளது. காரணம் தமது சொந்த மைதானத்தில், மைதானம் முழுக்க தம் நாட்டு ரசிகர்களில் ஆதரவுடன் பங்கேற்பதனால். ஆனால் இறுதியாக இடம்பெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரில் இலங்கை அணி மிக மோசமான தோல்விகளை எதிர்கொண்டமை ரசிகர்கள் மத்தியில் மிகுந்த கவலையையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.
பார்க்கலாம் தசுன் சானக்க தலைமை யிலான இலங்கை அணி உலகக் கிண்ண தொடரில் தமது நாட்டு ரசிகர்களுக்கு வெற்றியை பரிசாகக் கொடுப்பார்களா என.

## இலங்கை அணியின் பலம்

இலங்கை அணிக்கு இவ் உலகக்கிண்ண தொடரின் மிகப் பெரிய பலமே தமது சொந்த மண்ணில் பங்கேற்பதாகும். அதிலும் மைதானம் முழுக்க தம் நாட்டு ரசிகர்களின்



ஆரவாரங்கள் ஒலிக்க பங்கேற்பது மேலும் கூடுதல் பலத்தை கொடுக்கின்றது. அத்துடன் சிறந்த அனுபவமிக்க மற்றும் துடிப்பு மிக்க இளம் வீரர்கள் கொண்ட அணித்தெரிவு இலங்கையின் பலமாக நோக்கலாம்.
அத்துடன் துடுப்பாட்டத்தில் பெத்தும் நிஷங்க, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா ஆகியே–ார் தொடராக பிரகாசிப்பது அணியின் ஓட்டக் குவிப்பிற்கு மிகப் பெரும் பலமாகும். மேலும் சகலதுறை வீரர்களான அணித்தலைவர் தசுன் சானக்க, நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான வனிந்து ஹசரங்க, இளம் சுழல்பந்து நட்சத்திரங்களான துனித் வெல்லாலகே மற்றும் கமிந்து மெண்டிஸ் ஆகியோர் அணியின் பலத்தை மேலும் அதிகப்படுத்துகின்றனர்.
மேலும் டெத் ஓவர்களை வீசும் மதீச பத்திரன மற்றும் துஷ்மந்த ஷமீர ஆகியோரின் தரமான வேகம் இலங்கை இன்னும் பலத்தை கொடுக்கின்றது. அத்துடன் இலங்கையின் களத்தடுப்பை அவர்களின் வெற்றியில் மிகப் பெரும் பங்கினை வகிக்கும் என்பது தின்னம்.

## இலங்கை அணியின் பலவீனங்கள்

ஒரு அணியின் தோல்வியில் மிகப் பெரும் பங்கு வகிப்பது அவர்களின் பலவீனங்களே. குறிப்பாக ஒரு சில பலவீனங்கள் கண்டறியப்பட்டு அவை அடுத்த அடுத்த போட்டிகளில் நிறுத்தப்பட்டால் மாத்திரமே வெற்றியினை பெற்றுக் கொள்ள முடியும். அப்படியிருக்க இலங்கை அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்டம் ஒவ்வொரு போட்டித் தொடரிலும் பலவீனமாகவே காணப்படுகின்றது. இப் பலவீனம் இதுவரையில் சீர் செய்யப்படாமலே காணப்படுகின்றது.
மேலும் பவர் பிளே ஓவர்களில் எதிரணிக்கு இலங்கை அணி அதிகளவில் ஓட்டங்களை விட்டுக் கொடுப்பதும் பலவீனமாகும்.
அத்துடன் போட்டிகளின் இறுதித் தருவாயில் இலங்கையின் துடுப்பாட்ட வீரர்களும் , பந்துவீச்சாளர்களும் எதிரணியை சமாளிக்கும் நிலையிலிருந்து மாறி பொறுப்பற்ற ஆட்டத்தை வெளிப்படுத்துவது மிகப் பெரும் பலவீனமாகும்.
இவ்வாறான ஒரு சில பலவீனங்களை இலங்கை அணி நிவர்த்தி செய்தால் இம்முறை 10ஆவது இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் பெயர் பதிக்கப்பட வாய்ப்புக்கள் ஏராளம்.




இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.